## "நாவலர் பெருமானது நூல்களை பாட நூல்களாக்க வேண்டும்"


Riegstered as a News pape in Ceylon விலைசதம் 15

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் - ரூ. 34-00
ஒரு வருடம் - ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU

National Tamil Daily

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

மலர் 11
இதழ்: 70
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம்) சித்திரை 10 ஸபர் 4 செவ்வாய்க்கிழமை 22-4-69]


## சித்தாந்தவித்தகர் கருத்து

யாழ்ப்பாணம், செவ். "சைவமும் தமிழும் வளர்த்த நாவலர் பெருமானது நான்கு பால பாடங்களையும், இரண்டு சைவவினா விடைகளையும், பெரிய புராணத்தையும் அரசாங்கம் பாடநூலாக அங்கீகரித்து, பாடசாலைகளில் கற்பிக்கவேண்டும். நாவலர் விட்டுச்சென்றதொண்டிற்கு நாம் செய்யும் கைங்கரியம் இதுவேதான்."

சைவ மகாநாட்டுக்குத் தலைமை தாங்கவென நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த சென்னை கயப்பாக்கம் சித்தாந்தகர் திரு. சோமசுந்தரம் செட்டியார் நமது நிருபருக்கு அளித்த பேட்டியின்போது இவ்வாறுதெரிவித்தார்.

நேற்றுக்காலை 11-20 மணிக்கு விமான மூலம் பலாலியில் வந்திறங்கிய சோமசுந்தரம் செட்டியாரை சைவபரிபாலன சபை உபதலைவர் முத்துத்தம்பி முதலியார், செயலாளர் ஆ. தனபாலசிங்கம் உட்பட பலர் மலர்மாலையிட்டு வரவேற்றனர்.

ஈழநாட்டுக்கு அளித்த விசேஷ பேட்டியில் திரு. சோமசுந்தரம் செட்டியார் மேலும் தெரிவித்ததாவது:

தமிழிலிருந்து சைவத்தை நீக்கமுடியாது. சைவம் இல்லாமல் தமிழில்லை. சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கவே நான் இங்கு வந்திருக்கின்றேன்.

சங்க காலம்தொட்டு தமிழ்நூல்கள் சைவம் கலந்ததாகவே இருக்கின்றன. சமயம் கலக்காத எந்த ஒரு தமிழ் நூலையும் காணமுடியாது.

ஆதிகாலத்தில் சிவபெருமானை சைவர்கள் வணங்கவில்லை என்று கூறப்படுகின்றது அது முற்றிலும் தவறானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். சங்க காலத்து நூல்களில் சிவபெருமானைப் பற்றிப்பாடப்பட்டுள்ளது.

நல்லைநகர் தந்த நாவலர் பெருமானது கொள்கைகளையும் அவரது அறிவுரைகளையும் நாம்பின்பற்றவேண்டும் என்றும் திரு. சோமசுந்தரம் செட்டியார் சொன்னார்.

தீண்டாமை ஒழிப்பு பற்றி அவரது அபிப்பிராயங்களை கேட்டபோது அது அரசியல் விஷயம் என்றும் அதுபற்றித் தான் எதுவும் பேச முடியாதிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தி. மு. க ஆட்சிக்கு வந்தபின் தமிழ்நாட்டில் சமய வளர்ச்சியில் ஏதாவது மாறுதல் ஏற்பட்டுள்ளதா என்று கேட்டபோதும்கூட அதே பதிலைத்தான் திரு. சோமசுந்தரம் செட்டியார் சொன்னார்.

இவரது சிறப்புச் சொற்பொழிவு இம்மாதம் 23ம் திகதி நாவலர் மண்டபத்தில் நடைபெறும் சைவ மகாநாட்டில் இடம்பெறும்.

(கா. நி)

# மேதினக் கூட்டங்களுக்கு மே 1-ந் திகதி அனுமதியில்லை

## ஒலிபெருக்கி அனுமதிகளும் ரத்துச் செய்யப்பட்டன

யாழ்ப்பாணம், செவ்வாய்

**யாழ்ப்பாணத்தில் மே மாதம் 1-ம் தேதி ஒழுங்குசெய்யப்பட்டிருந்த மே தினவிழா கூட்டங்களுக்கு பொலிஸார் அனுமதி வழங்கவில்லை சட்டத்தை மீறி கூட்டங்கள் நடத்துவோர் மீது பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள். மே மாதம் முதல் தேதி வெசாக்தினம் நிகழவிருப்பதால் அன்றையதினம் மேதின விழா கூட்டங்களுக்கு அனுமதிவழங்கப்படவில்லை.**

மே மாதம் முதல் தேதி மேதினவிழா கூட்டங்களை நடத்த தமிழரசு, கூட்டாட்சிக்கட்சிகள், சீன சார்பு கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவை அனுமதி கோரியிருந்ததாகவும், மேலிடத்தின் உத்தரவை தொடர்ந்து மே மாதம் முதல் தேதி அரசியல் கூட்டங்கள் நடத்த எந்தக் கட்சிக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாதென்றும், உதவி பொலிஸ் அதிபர் ஜனுப் அஸீஸ் நேற்று தெரிவித்தார்.

சமய நிகழ்ச்சிகள் தவிர வேறு எந்தக் கூட்டங்களுக்கும் அனுமதி வழங்கப்படாதென்றும் அவர் மேலும் தெரிவித்தார். [illegible] சட்டத்தை [illegible] மே மாதம் முதல் தேதி கூட்டங்களையோ [illegible] ஊர்வலங்களையோ நடத்த அனுமதி வழங்கப்படாதென்றும், உதவி பொலிஸ் அதிபர் தெரிவித்தார்.

வெசாக் கொண்டாட்டம் மேமாதம் முதல்தேதி ஆரம்பமாகி தொடர்ந்து 3 தினங்கள் நடைபெறவிருப்பதால் ஏப்ரல் 30-ம் தேதியே கொழும்பில் மேதின விழாவைக்கொண்டாடசீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியை தவிர மற்றும் கட்சிகள் ஏற்பாடுகள் செய்துவருகின்றன.

யாழ்ப்பாணத்தில் ஏப்ரல் 30-ம் தேதி அல்லது மே 2-ம் தேதி மேதின விழா கூட்டங்கள் நடைபெறுமென

### யாழ்நகரில்வரட்சி தணிந்துள்ளது

யாழ்ப்பாணம்திங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல நாள் கடும் வரட்சியின்பின் சென்ற வாரம் ஒருநாள் கடும்மழைபெய்த

கம்பர் மலை கொலை

## ஸ்தல விசாரணையின்பின் சந்தேக நபர் ரிமாண்டில்

இமையாணன், ஞாயிறு கம்பர் மலையில் ஏழு பிள்ளைகளின் தந்தையான கதிரர் தம்பர் (53 வயது) மண்வெட்டியால் அடித்து ஸ்தலத்திலேயே கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக பருத்தித்துறை மாஜிஸ்ரேட் திரு. கே. விக்கினராஜா நேற்று ஸ்தல விசாரணை நடத்தினார்.

சம்பவத்தைநேரில் கண்டவரெனக் கூறப்படும் வைரவன் கைம்பெண் பாறி, கிருஷ்ணன் அருமைச்சந்திரன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருக்கையில் ஏற்பட்ட சச்சரவைத் தொடர்ந்தே காலஞ்சென்றவரை செல்லத்துரை என்பவர் மண்வெட்டியால் தாக்கியதாக விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபரான மாணிக்கம்செல்லத்துரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

## பன்றித்தலைச்சி அம்மன் ஆலயக் கதவுகள் திறந்தன

சாவகச்சேரி, திங்கள்

கடந்த ஒருமாதகாலமாக மூடப்பட்டிருந்த மட்டுவில் வைச் சேர்ந்த ஒருவரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அடுத்தமாதம் 5-ம்

## 'மார்ட்டின் கமிஷன் கூட முஸ்லிம்களை புறக்கணித்துவிட்டது'

### எதிர்க்கட்சி எம். பி. க்களிடம் எச். எம். ஸி. காதர் சொன்னார்

யாழ்ப்பாணம், செவ்.

தமிழ் மக்களின் உரிமைக்காக வாதாடியும், போராட்டங்கள் நடத்தியும் வரும் தமிழ்க் கட்சிகள் தமிழ்மக்களுக்குள்ளேயே ஒரு பகுதியினரின் உரிமைகளைக் கொடுக்கமுன் வருகிறார்களில்லை. இதனால் யாழ்ப்பாணத்தில் வாழும் முஸ்லிம்களும் பாதிக்கப்படுபவர்களில் ஒரு பகுதியினர் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

யாழ்ப்பாணம் வந்திருந்த எதிர்க்கட்சி கூட்டணி எம். பி. க்கள் திருவாளர்கள் ரத்நாயக்கா, சுபசிங்கா ஆகியோர் முன்னிலையில் இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினரான திரு ஏ. காதர்.

இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியின் யாழ்ப்பாணக் கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கூட்டம் யாழ்ப்பாணம் முஸ்லிம் பகுதியிலுள்ள கிளை அலுவலகத்தில் நடைபெற்றது. திரு. அப்துல் மஜீத் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. காதர்மேலும் [illegible]

போதும் 2 பேரே இருந்தார்கள். மார்ட்டின் கமிஷன் விசாரணையின்போது முஸ்லிம் மக்களுக்கு குறைந்தது 4 தொகுதிகளாவது அமைத்துத்தருமாறு கேட்டோம் இன்று 23 வட்டாரங்களாக அதிகரித்துக்கூட 2 முஸ்லிம் உறுப்பினர்கள் தான். மாட்டின் கமிஷன் கூட முஸ்லிம்களை புறக்கணித்துவிட்டது.

தமக்குள்ளேயே ஒரு சாராருக்கு போதிய சமத்துவமும் உரிமையும் கொடுக்காமல் பெரும்பான்மையினத்திடமிருந்து தமது உரிமைகளை தமிழ்க் கட்சிகளால் ஒரு போதும் பெற முடியாது என்று சுட்டிக்காட்டினார்.

திரு இரத்நாயக்கா எம். பி. பேசுகையில், இஸ்லாமிய மக்கள் இன்று சோஷலிஸ பக்கம் தங்கள் கவனத்தைச் செலுத்தத் தொடங்கியுள்ளார்கள் என்றும் நாடு முழுவதும் ஏற்பட்டிருக்கும் இப்புதிய திருப்பத்தில், தமிழ்மக்களும் சேர்ந்து கொண்டால் விடுதலைபெற முடியும் என்றார்.

திருவாளர்கள் சுபசிங்கா எம். பி., வி. பொன்னம்பலம் எம். ஏ., உட்பட இன்னும் பலர் பேசினர்

(கா. தி.)

## செய்திச் சுருக்கம்

### இளைஞர் சேவைத் திட்டம்

கேகாலை, திங்கள்

தேசிய இளைஞர் சேவைத் திட்டத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் இம்மாதம் 23-ம் தேதி டெடிகமையில் பிரதமர் டட்லி சேனநாயக்க

### அரசாங்கத்தின் மேதினப் பரிசு

கொழும்பு, திங்கள்

புதுமுறையான ஒரு பரிசை அரசாங்கம் இந்த ஆண்டு மேதினப் பரிசாக தொழிலாளர்களுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றித்தலைச்சி அம்மன் ஆலயக் கதவுகள் திறந்தன

சாவகச்சேரி, திங்கள்

கடந்த ஒருமாதகாலமாக மூடப்பட்டிருந்த மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் நேற்று திறக்கப்பட்டு பிராயச்சித்தம் செய்யப்பட்டது. இனி மேல் தொடர்ந்து வழக்கம் போல் பூசைகளை நடத்த பரிபாலன குழு ஒழுங்கு செய்துள்ளது.

இக் கோவில் சம்பந்தமாக சாவகச்சேரி மாவட்ட நீதி மன்றத்தில பரிபாலன குழுவைச் சேர்ந்த ஒருவரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அடுத்தமாதம் 5-ம் தேதி விசாரணை செய்யப்படவிருக்கிறது.

மீண்டும் ஆலயம் திறக்கப்பட்டிருப்பதால் எந்த நேரமும் ஆலயப் பிரவேசம் செய்ய தயாராக இருக்கும்படி தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க தென்மராட்சி கிளை உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளது.

பாராளுமன்ற நிரந்தர குழுவில்

## அரசாங்கம் - எதிர்க்கட்சி சமமான ஆசனங்கள்

கொழும்பு, ஞாயிறு

பாராளுமன்ற நிரந்தரக் குழுவில் அரசாங்கக் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் சமமான ஆசனங்கள் ஏற்பட்டுள்ளமை ஐக்கியதேசியக் கட்சிக்கு ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளதாம்.

உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் தலைவராகவுள்ள இந்த நிரந்தரக் குழுவில் அரசாங்கக் கட்சிக்கு 12 ஆசனங்களும், எதிர்க்கட்சிக்கு 8 ஆசனங்களும் முன்பு இருந்தன. தமிழரசுக்கட்சி அரசாங்கத்திலிருந்து விலகி எதிர்க் கட்சி வரிசையில் நிற்பதால் தமிழரசுக்கட்சியின் சார்பில் இக்குழுவில் அங்கத்தவர்களாகவிருந்த முன்னாள் தமிரசுத் தலைவர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனும், கிளிநொச்சி ஆட்சி மன்ற உறுப்பினர். திரு. கா. பொ. இரத்தினத்தினதும் ஆசனங்களை அரசாங்கக் கட்சி இழந்துள்ளதே இந்த நிலை ஏற்பட்டுள்ளதற்கான காரணம் என அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த சகல அங்கத்தவர்களும் தவறாது இக்குழுக் கூட்டத்திற்கு சமூகமளிக்க வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சி அங்கத்தவர்களுக்கு அறிவித்துள்ளது.

## யாழ்நகரில்வரட்சி தணிந்துள்ளது

யாழ்ப்பாணம்திங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல நாள் கடும் வரட்சியின்பின் சென்ற வாரம் ஒருநாள் கடும்மழைபெய்த பின் மீண்டும் கடும்வெப்பம் நிலவியது. நேற்று பிற்பகல் சிறிது நேரம் கடும் இடி முழக்கத்துடன் இலேசான மழை பெய்தது என்றாலும் நேற்று பிற்பகலிலிருந்து வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. மானிப்பாயிலும் மற்றும் சில இடங்களிலும் சிறிது நேரம் பலத்த மழை பெய்தது.

## ஜாதிகசம்பத இனி 1 ரூபா

கொழும்பு, ஞாயிறு

இப்போது 2 ரூபாவாகவிற்கப்பட்டுவரும் ஜாதிகசம்பத சுவீப் டிக்கட் அடுத்த ஜூன் மாதம் 28-ந் திகதியிலிருந்து ஒரு ரூபாவாக விற்கப்படும். தேசிய லொத்தர்சபை இந்த முடிவை எடுத்துள்ளது.

முதலாவது பரிசாக ஒரு லட்சத்து ஐம்பதினாயிரமும், இரண்டாவது பரிசாக ஒரு லட்சத்து இருபத்திஐயாயிரமும், மூன்ருவது பரிசாக ஒரு லட்சம் ரூபாயும் வழங்கப்படும்.

றும், உதவி [illegible] பர் ஜனுப் அஸீஸ் நேற்று தெரிவித்தார்.

சமய நிகழ்ச்சிகள் தவிர வேறு எந்தக் கூட்டங்களுக்கும் அனுமதி வழங்கப்படாதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சட்டத்தை மீறி மே மாதம் முதல் தேதி கூட்டங்களையோ ஊர்வலங்களையோ நடத்துபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அன்றைய தினம் சமய நிகழ்ச்சிகள் தவிர்ந்த வேறு எந்தக் கூட்டங்களிலும் ஒலிபெருக்கி பாவிக்க அனுமதி வழங்கப் [illegible] ஏப்ரல் 30-ம் தேதியே கொழும்பில் மேதின விழாவைக்கொண்டாடசீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியை தவிர மற்றும் கட்சிகள் ஏற்பாடுகள் செய்துவருகின்றன.

யாழ்ப்பாணத்தில் ஏப்ரல் 30-ம் தேதி அல்லது மே 2-ம் தேதி மேதின விழா கூட்டங்கள் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே, ஒழுங்குசெய்தபடி, மேமாதம் 1-ம்தேதியே மேதினவிழா நடைபெறுமென்று சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## 'சோஷலிஸ அரசாங்கத்தினல் தீண்டாமையை ஒழிக்கலாம்'

யாழ்ப்பாணம், செவ்

சிறுபான்மைத் தமிழர்கள் இன்றைய நிலையில் ஓர் முற்போக்கு அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்வர வேண்டும் பலமுற்போக்கு இயக்கங்களுடன் ஒன்று சேர்ந்து ஒரு சோஷலிச அரசாங்கத்தை அமைத்து அதன் மூலம், தீண்டாமை பிரச்னையை சுமூகமாகத் தீர்க்கலாம்.

நாவற்குழி கிழக்கு காந்தி சனசமூக நிலைய 18-வது ஆண்டு நிறைவு விழாவில், சிறுபான்மைத் தமிழர் மகாசபை தலைவர் திரு. எம்.சி. சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. கா. காசிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. வி. பொன்னம்பலம் கூறியதாவது: உண்மையான விவசாயிகள்தான் விளைவித்த நெல்லைத்தான் உண்பதில்லை அதற்குப்பதிலாக அவனுக்கு கூப்பன் அரிசிதான் கிடைக்கும். யந்திரம் பாகுபாடு காட்டுவதில்லை. ஆனல் இதயம் படைத்த மனிதன் பாகுபாடு காட்டுகிருன். தொழிளாளி வர்க்கம், பாட்டாளி வர்க்கம் முன்னேறவும், வறுமையை ஒழிக்கவும் தேசத்தைக் காக்கவும் நாம் முன்வர வேண்டும்.

திரு. வி சிவசுப்பிரமணியம், திரு. எஸ். எம். ஈ. யோசப் உட்பட மற்றும் பலர் பேசினர்கள்

### பதவி உயர்வு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபரான திரு. ரி. முருகேசம்பிள்ளை இலங்கை நிர்வாக சேவை நான்காம் தரத்துக்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

மொத்தம் சித்தியடைந்த நால்வருள் இவரே முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நீண்டகாலம் காரியாதிகாரியாகக் கடமையாற்றிய இவர் இரு வருடங்களுக்கு முன்னரே உதவி அரசாங்க அதிபராகப் பதவி ஏற்ருர்.

இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியின் யாழ்ப்பாணக் கிளையினுல் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கூட்டம் யாழ்ப்பாணம் முஸ்லிம் பகுதியிலுள்ள கிளை அலுவலகத்தில் நடைபெற்றது. திரு. அப்துல் மஜீத் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. காதர்மேலும் பேசியதாவது:-

யாழ்ப்பாணம் மாநகர சபையில் 10 அங்கத்தவர்கள் இருந்தபோதிலும் 2 முஸ்லிம் அங்கத்தவர்களே இருந்தார்கள். பின்னர் 17 அங்கத்தவர்கள் இருந்த

இன்று

### யாழ் மாநகர சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் இன்றுமாலை 3-30மணிக்கு நகர முதல்வர் திரு. எஸ். நாகராஜா தலைமையில் நடைபெறும் மொத்தம் 13 பிரேரணைகள் கூட்டத்தில் கொண்டுவர முன்னறிவிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. (கா. நி)

### கார் - லொறி மோதல்

புலோலி, திங்கள்

லொறியும் காரும் விபத்தில் சிக்கிய சம்பவம் புலோலிச் சந்தியில் நடைபெற்றது. கொடிகாமம் வீதியால் வந்து கொண்டிருந்த காரும் வல்லிபுரக் கோயில் வீதியால் வந்துகொண்டிருந்த லொறியும் ஒன்றை ஒன்று விலத்தும் போது லொறியின் பின்பக்கத்தில் கார் மோதிக்காருக்கு சேதம் ஏற்பட்டது எவருககும் எதுவித காயம் ஏற்படாது உயிர் தப்பினர்கள்.

### இளைஞர் சேவைத் திட்டம்

கேகாலை, திங்கள்

தேசிய இளைஞர் சேவைத் திட்டத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் இம்மாதம் 23-ம் தேதி டெடிகமையில் பிரதமர் டட்லி சேனநாயகாவின் தலைமையில் நடைபெறவிருக்கிறது. இந்த திட்டம் வேலையில்லாதிருக்கும் யுவதிகளையும், இளைஞர்களையும் நாட்டின் அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்தும் நோக்கோடு ஆரம்பிக்கப்படுகிறது. இந்த வைபவத்தில் ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் பலர் கலந்து கொள்ளவிருக்கிறர்கள் ஏற்கனவே இத் திட்டத்திற்கு ஆயிரத்துக்குமதிகமான அங்கத்தவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

0 0 0

### பிரயாண சலுகைகள் கிடையா

கொழும்பு, திங்கள்

இனிமேல் புதிதாகக் கூட்டுத்தாபனங்களில் வேலைக்குச் சேரும் ஊழியர்களுக்கு ரயில் பிரயாணத்துக்கான வாரண்டுகள் வழங்கப்படமாட்டாது இவர்களுக்கு பஸ், ரயில் பிரயாணத்துக்கான சீசன் டிக்கட்களும் கிடைக்கமாட்டா. கூட்டுஸ்தாபனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களின் உத்தரவுகளின்படியே புதிய ஊழியர்களுக்கு இந்தச் சலுகைகள் மறுக்கப்படுவதாகத் தெரிகிறது. பழைய ஊழியர்கள் இந்தச் சலுகைகளைத் தொடர்ந்து அனுபவித்து வருவார்கள் எனவும் புதிய ஊழியர்களுக்கே இவைகள் மறுக்கப்பட்டுள்ளன எனவும் கூட்டுஸ்தாபனங்கள் தெரிவித்துள்ளன.

0 0

### வேலையற்ரேருக்கு வேலைவாய்ப்பு

கோட்டை, திங்கள்

வேலையில்லாத்திண்டாட்டம் பற்றி பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக அரசாங்கத்தால் நிறுவப்பட்ட மந்திரிசபையின் உபகுழு அரசாங்க துறையில் எத்தனைபேருக்கு வேலைவழங்க வேலைகாலியாக வுள்ளது என பரிசீலனை செய்து நிரப்பப்பட வேண்டிய 35000 வெற்றிடங்கள் உள்ளன எனவும் இதை விட 5000 காலி இடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டியுள்ளன எனவும் தெரிவித்துள்ளது. இந்த வெற்றிடங்கள் எல்லாவற்றையும் அரசாங்கம் உடனடியாக நிரப்ப வேண்டுமென உபகுழு சிபார்சு செய்துள்ளது, இந்த காலியான இடங்களுக்கு இந்நாட்டில் வேலையின்றித் திண்டாடும் பெருந்தொகையானேர் நியமிக்கப்படுவர் எனத் தெரிகிறது.

### அரசாங்கத்தின் மேதினப் பரிசு

கொழும்பு, திங்கள்

புதுமுறையான ஒரு பரிசை அரசாங்கம் இந்த ஆண்டு மேதினப் பரிசாக தொழிலாளர்களுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளது. உபஉணவுப்பொருள்களின் பங்கீட்டை கூட்டுவதே இந்தப் புதிய பரிசாகும். பங்கீட்டுமுறையின் கீழ் வரும் மல்லி, பருப்பு, பாசிப்பயறு, கடுகு, மிளகாய், மாசி, சீரகம், பூடு முதலானவைகளும் பங்கீட்டு முறையின் கீழ்வராத வேறு பொருள்களும் அதிகமாகக் கிடைப்பதற்கு வழிசெய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதமரின் தலைமையிலான உணவுவிநியோகம் சம்பந்தமான மந்திரிசபை உபகுழுசெய்த சிபார்சின் பேரிலேயே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ராவல்பிண்டி, ஏப் 20

கி. பாகிஸ்தானில் கடந்த வாரம் ஏற்பட்ட கடும் புயலில் உயிரிழந்தோர் தொகை 670 ஆக அதிகரித்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### 'புகார் இருந்தால் தெரிவியுங்கள்'

திருக்கோணமலை, திங்கள்

திருக்கோணமலை நகர சபை, இங்குள்ள தேர்தல் அலுவலகத்தைப் பற்றிப் பல புகார்களைத் தேர்தல் ஆணையாளருக்குத் தெரிவித்திருந்தது. வாக்காளர் இடாப்புச் சம்பந்தமாகத் தெரிவிக்கப்பெற்ற 720ஆட்சேபனைகளை யொட்டித்தேர்தல் அதிகாரி நடாத்திய விசாரணைகள் சட்டத்துக்கு உட்பட்டவை என்று தேர்தல் ஆணையாளர் திரு. டயஸ் அபயசிங்கா திருக்கோணமலை நகர சபைத் தலைவர் டாக்டர் எஸ். சிவானந்தத்துக்கு அனுப்பியுள்ள பதிலில் குறிப்பிட்டுள்ளார். இங்குள்ள தேர்தல் அதிகாரிக்கு எதிராக நகரசபை வேறு ஏதேனும் குற்றச்சாட்டுகள் இருப்பதாக அறிவித்தால் அவற்றை விசாரிக்கத்தான் தயாராக இருப்பதாகவும் தேர்தல் திணைக்கள ஆணையாளர் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று நாட்களுக்கு முன்

## கோர்ட்டுக்கு சைக்கிளில் சென்றவர் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்

யாழ்ப்பாணம், திககள்

சாவகச்சேரி நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணை ஒன்றிற்காக கடந்த 16-ந் திகதி சைக்கிளில் சென்ற திருநெல்வேலியை சேர்ந்த ஒருவர் நேற்று வரை வீடு திரும்பவில்லை.

ஆனல் நேற்றிரவு கைதடிக்கும் நுணுவிலுக்குமிடையில் இரத்தவெள்ளத்தில் கிடக்கக் காணப்பட்ட இவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்றுக் காலை அறிவு திரும்பாமலேயே மரணமானர்.

இதுசம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினர். மரணமான ஆறுமுகம் இராமசாமி விபத்தில் சிக்கிக் கிடந்த இடத்தில் அவரது சைக்கிள் தேங்காய் மூடை ஒன்றுடன் சிதறிக் கிடந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

விபத்து எவ்வாறு நடந்தது என்பது பற்றி இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. மோட்டார் வாகனத்தால் இவர்மோதி இருக்கப்பட்டிருக்கலாம் என விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவத்தைக் கண்டவர்கள் எவரும் இல்லையாதலால் எவரும் சாட்சியமளிக்கவில்லை.

மரணமானவரது வேட்டிக்குள்ளிருந்த ஒரு ரசீதில் காணப்பட்ட அவரது விலாசத்தைக்கொண்டே அவர்களது உறவினர்களுக்கு நேற்றிரவு தகவல் கொடுக்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்கினராஜா ஸ்தல விசாரணை நடத்தினர். பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார். (கா. நி.)

## மந்துவில் கொலைவழக்கில் எதிரிக்கு 8 வருட கடூழியம்

யாழ்ப்பாணம், திங்கள்

மந்துவில் கொலைவழக்கில் எதிரியான இரத்தினத்துக்கு எட்டுவருட கடூழியச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சுமார் ஒரு மணி நேரம் ஜூரி சபையினர் தனிமையில் கூடி மந்திராலோசனை செய்தபின் எதிரி கைமோச கொலைக் குற்றவாளியென ஏகமனதாகத் தெரிவித்தனர் இதைத் தொடர்ந்து நீதியரசர் தீர்ப்பு வழங்கினர்.

தீர்ப்பு வழங்குமுன் நீதியரசர் கத்தி பாவித்தது தேவையற்ற விஷயம் என்பது எனது அபிப்பிராயம் என்று தெரிவித்தார்.

இவ் வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிறெஸ்டர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் மந்துவில் கந்தன் இரத்தினம் என்பவர் ராசமுத்து குலசிங்கம் என்பவரைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் எஸ். யோகநாதன் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரியதரப்பில் அட்வகேட் ரஞ்சித் குணதிலகா ஆஜரானுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

### தேவை

பாவித்த பழைய கல்லுரல்கள் தேவை. தொடர்பு கொள்ளவும். தம்பிராசா வைத்தியசாலை, நெல்லியடி, கரவெட்டி. 950

தாதிமாராகவும் மருந்து பரிமாறுவோராகவும் பயிற்றுவிப்பதற்கு எஸ். எஸ். சி. சித்தியடைந்த பெண்கள் தேவை. ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியம். 31-5-69தேதிக்கு முன்னர் சொந்தக் கையெழுத்தில், ஆங்கிலத்தில் விண்ணப்பிக்கவும். தலைவர், கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய், சுளிபுரம். 960

### கல்வி

ஜீ. சீ. ஈ. சாதாரண / உயர்தர, கலை, விஞ்ஞானம், வர்த்தகம்- பயிலும் மாணவர்களுக்கு இல்லங்களில் / நிறுவனத்தில் தகைமையும், அனுபவமும் உள்ள ஆசிரியர்களால் டியூஷன் கொடுக்கப்படும். விசேட சித்திக்கு உத்தரவாதம் யுனைடெட் இன்ஸ்டிடியூட், 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 952

காலை / மாலை / போயா வகுப்புகளுக்கு: ஜீ. சீ. ஈ. சாதாரணம், கலை விஞ்ஞான / வர்த்தகம் / மனையியல் உயர்தரம்கலை / விஞ்ஞானம் / வர்த்தகம், ஜீ. ஏ. கியூ, சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல், வர்த்தகம், வர்த்தககணிதம், வர்த்தக புவியியல், பொருளாதாரம், விசேஷ ஆங்கிலம், சிங்களம் - வகுப்புகளுக்கு பிரவேசங்கள் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. மகளிருக்கு விசேட வகுப்புகளும் விடுதி வசதியும் உண்டு. யுனைட்டெட் இன்ஸ்டிடியூட், நெல்லியடி, கரவெட்டி. 953

யாழ்ப்பாணத்தில் முதலாவதாக மகளிருக்கு மாத்திரம் அனுபவமுள்ள பெண் பட்டதாரிகளால் ஆக்கப்பட்டது. விசேஷ சித்திகளுக்கு உத்தரவாதம். காலை, மாலை, போயா வகுப்புகள்- ஜீ. சி. ஈ. சாதாரணம் கலை / விஞ்ஞானம் / வர்த்தகம் / மனையியல், உயர்தரம் கலை / விஞ்ஞானம் / வர்த்தகம், ஜி. ஏ. கியூ, சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல், வர்த்தகம் விசேட ஆங்கிலம், சிங்களம். விடுதி வசதியுண்டு. தாமதமின்றி சேரவும், யுனைடெட் மகளிர் கல்லூரி, 107பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 954

யாழ்ப்பாணக் கல்வி நிலை

### WANTED

Wanted immediately A Matron to the Co-operative Hosp tal Society Ltd, Moolai, Chulipuram, Qualification: Nursing, Midwifery, Operation theatre work, previous experience also may be mentioned. Salary scale Rs. 2940 - 12 - 3300 per annumwith dearness allowance of 30% of the basic salary. Special living allowance of Rs 17/50, uniform allowance of Rs. 15/- Devaluation allowance of Rs 10/- and extra dearness allowance of Rs 5 - per month. Free furnished odging will be provided. Applications with copies of certificates of birth, educational qualifications, character and experience should reach the President, Co-operative Hospital Society Ltd, Moolai, Chulipuram not later than 31 5-69.

959

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
Poya, Pre-Poya 10-30 A.M.
John Wyne
in
ELDORADO

REGAL at JAFFNA
Daily 4-45, 7 &9-45 p m.
PrePoya Poya 10-30 A.M.
Robert Vagnerp
Raquel Welch
in
THE BIGGEST BUNDLE OF THEM ALL

ராஜா (யாழ்ப்பாணம்) 99வது தினம்
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்கு அரைக்கட்டணம்

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30 மணி
எஸ் எஸ் ஆர். - கமலா
நடித்த
சிவகங்கைச்சீமை

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி ஆர்.-ஜெயலலிதா
நடித்த
ஆயிரத்தில் ஒருவன்

# இன்றைய பலன்

22-4-69

சௌமிய வருடம்
சித்திரை மீ 10-ம் உ
செவ்வாய்க்கிழமை

திதி. பஞ்சமி. காலை 6-40 மேல் ஷஷ்டி.
நட்சத்திரம் - திருவாதிரை,
ராகுகாலம்-3-01- 4-31
சுபநேரம்-10-31-12-01

இன்று பிறந்தவர்களுக்கு — போராட்டங்களுக்குத் தாராளமாக இடமுண்டு, நெருங்கிய நண்பர் ஒருவர் உமக்குத் தவறான பாதையைக் காட்டக்கூடும். விளையாட்டு வீரர்களுக்குச் சிறப்பான ஆண்டு. தொழில்புரியும் இடத்தில் மேலதிகாரிகளின் கண்காணிப்புப் பலமாக இருக்கும் குழந்தையின் உடல் நலம் சிறிது கவலையைத் தரலாம். நிதானம் மிகவும் விரும்பத்தக்கது.

மேஷம்-வரவில்உயர்வு, வாழ்த்துமுண்டு.
ரிஷபம் தொழிலில் கவலை, தொல்லைகள் பெருகும்.
மிதுனம்- அலைமோதும் மனம், அற்ப இலாபம்.
கடகம்- தனச்சிறப்பு, தானிய விருத்தி.
சிம்மம்- சுடும்ப சுகக் குறைவு, பிரிவுத்துயர்.
கன்னி- கல்வி நலன், அறிஞர்கள் ஆதரவு.
துலாம்- இதயப்பூரிப்பு, இன்பத்தில் சாயல்.
விருச்சிகம்- அன்னிய வாசம், அகால போசனம்.
தனுசு- அன்பு வலை, ஆனந்த நிலை.
மகரம்- சிநேகிதர் பகை, சிந்தையில் குழப்பம்.
கும்பம்- புண்ணிய விருப்பு, இரக்க சிந்தை.
மீனம்- கடமையில் ஆர்வம், புகழ் பரவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 22—4—69

# கிளிநொச்சியில் மேலும் ஒரு குடியேற்றத் திட்டம்

கிளிநொச்சி, திங்கள்

பூநகரி, நெடுந்தீவு, தீவுப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு மட்டும் கிளிநொச்சிப் பகுதியில் ஒரு புதிய குடியேற்றத் திட்டத்தை அமைக்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

இப்புதிய குடியேற்றத் திட்டம் கிராஞ்சி என்ற இடத்தில் நிறுவப்படும். ஒவ்வொருவருக்கும் தலா 5 ஏக்கர் வீதம் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட மூன்று காரியாதிகாரிபிரிவிலுமுள்ள காணியில்லாதவர்களும், மீன்பிடித் தொழில் செய்பவர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம். இதற்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம், அரசாங்க அதிபருக்கு முகவரியிட்டு அனுப்பவேண்டும்.

இதற்கான விண்ணப்பப் பத்திரங்களை கிளிநொச்சி எம். பி. யின் அலுவலகத்திலும், தீவுப்பகுதி, நெடுந்தீவு, பூநகரி காரியாதிகாரி அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

# "சும்மாகிடக்கும் காணிகளை இல்லாதோர்க்கு வழங்கவும்'

யாழ்ப்பாணம், செவ்வாய்

'பல வருடங்களாகச் சொந்தக் காரரால் பாவிக்கப்படாதிருக்கும் காணிகளையும், உறுதிகள் இல்லாது எவரும் சொந்தமெனக் கூற முடியாதிருக்கும் காணிகளையும், பாவனை இன்றியிருக்கும் முடிக்குரிய காணிகளையும் சுவீகரித்து அக்காணிகளை அங்கு தற்போது வசிப்போருக்கும், காணியற்ற வறியோருக்கும் பங்கிட்டு வழங்க நகரமுதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும்''

இன்று நடைபெறவிருக்கும் யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இப்பிரேரணையைக் கொண்டுவருவதற்கு திரு. எஸ். ஜே. அன்ரனி முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார்.

23-ம் வட்டார அங்கத்தவரான திரு. வி. சிவசுப்பிரமணியம் பின்வரும் பிரேரணையைக்கொண்டுவர முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார்.

ஈழத்தமிழன் வீரத்துடன் வட இலங்கை ஆண்டான் என்னும் உண்மையை வருங்கால சந்ததிக்கு ஞாபகம் ஊட்டும் முகமாக தமிழ் மன்னன் பண்டாரவன்னியனுக்கு மாநகரசபை முன்றலில் சிலை அமைக்கபொருத்தமான இடம் தெரிவுசெய்து தரவேண்டும். (கா. நி.)

## ச. ச நிலைய ஆண்டுவிழா

ஊர்காவற்றுறை, திங்கள்

புங்குடுதீவு - சிவலைப்பிட்டி சனசமூக நிலையத்தின் 10-வது ஆண்டுவிழா ஈச்சங்குண்டு திறந்தவெளி யரங்கில் கொண்டாடப்பட்டது.

புங்குடுதீவு கிராமசபை உபதலைவர் திரு பி.கார்த்திகேசு விழாவுக்குத் தலைமை தாங்கினார். உள்ளூராட்சி மன்ற விசாரணையாளர் திரு. பி. பரஞ்சோதி கொடியேற்ற விழாவை ஆரம்பித்துவைத்தார்.

புங்குடுதீவு கல்வி வளர்ச்சிக் கழகச் செயலாளர் திரு கு. யோ பூராசா, தீவுப்பகுதி மாவட்ட தமிழரசுக்கட்சிச் செயலாளர் திரு. க. திருநாவுக்கரசு உட்படப் பலர்உரைநிகழ்த்தினர்.

விழாவையொட்டி நடைபெற்ற விளையாட்டுப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

சிவலைப்பிட்டி சனசமூக நிலையத்தின் 12-வது தயாரிப்பான 'புங்கபுரிக்காவலன்' என்ற சரித்திர நாடகம் இறுதிநிகழ்ச்சியாக இடம்பெற்றது.

......

## காசோலை மோசடியாம்

## திருநெல்வேலி கருத்தரங்கு

### இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செவ்

திருநெல்வேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றுவரும் அபிவிருத்தி உற்பத்தி பற்றிய கருத்தரங்கின் இன்றைய நிகழ்ச்சிகள்:

காலை 10-00 மணி: யாழ் மாவட்ட கிராமஅபிவிருத்தி சிறு கைத்தொழில் உதவி அதிகாரி: கிராம அபிவிருத்தியும், சிறு கைத்தொழில் பற்றியும் சொற்பொழிவு

# சின்னக்கிண்ணியா விளையாட்டு கழகம்

திருக்கோணமலை, திங்கள்

திருக்கோணமலை வட்டார விளையாட்டு அதிகாரி திரு. என். சிங்காரவேலின் முயற்சியினால் "சின்னக்கிண்ணியா விளையாட்டுக் கழகம்'' என்னும் விளையாட்டுக்கழகம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இவ் விளையாட்டுக்கழகத்தின் நடப்புவருட நிர்வாகிகள்.

தலைவர்: ஜனாப் ஏ. ஏ. ஹசன், உபதலைவர்: ஜனாப் ஏ. சலீம், செயலாளர்: ஜனாப் எம். எம். முஹைதீன், உபசெயலாளர்: ஜனாப் ஏ. எம். ஏ. வஹதூர்த், பொருளாளர்: ஜனாப் எம். எம். சலோம், உபபொருளாளர்: ஜனாப் எம் எச். எம். சுல்தான். விளையாட்டுத்தலைவர் ஜனாப் ஏ. எம். எம். முஸ்தாபா.

......

## புத்தாண்டு விளையாட்டுப் போட்டி

திருகோணமலை, திங்கள்

சீனன் வாடி பொலீஸ் பகுதியினரால் நடாத்தப் படும் புத்தாண்டு விளையாட்டுப் போட்டி இம்முறையும் பொலீஸ் நிலைய மைதானத்தில் நடை பெற்றது. விழாவை குடாக்கரை கிராம சபைத் தலைவர் திரு.கே. ஜெயினதீன் தேசியக் கொடி யேற்றி ஆரம்பித்து வைத்தார். திரு சிறிசேன தலைமையில் கிண்ணியா பட்டின சபைத் தலைவர் எம்.ஈ.எம். மஹறநவும் வெற்றி பெற்றோக்குப் பரிசில்களை வழங்கினார்.

## பாஷையூரில் வசந்தவிழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

பாஷையூர் புனித அந்தோனியார் கழகம் நாளையும் நாளைமறுதினமும் வசந்த விழா கொண்டாட விருக்கிறது. பாஷையூர் அழகையா முத்தமிழ் அரங்கில் நடைபெறும் இவ் விழாமுக்கிய நிகழ்ச்சியாக அண்ணா படிப்பகம் திறந்துவைக்கப்படும். பெண்கள் மின்னொளி வலைப்பந் தாட்டம், கரம், காவடி, பொய்க்கால் குதிரை முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளாக அமையும்.

......

## திருடர் தொல்லை

புலோலி திங்கள்

புலோலி தெற்கில் திரு

# 'பாடும்மீன்என்றேபெயரிடுக; சேவையைத் தாமதியாதீர்'

## கிழக்கிலங்கை கடுகதி ரயில்சேவை பற்றி திரு. இராசமாணிக்கம் கடிதம்

திருக்கோணமலை, திங்.

"திருக்கோணமலை, கிழக்கிலங்கையின் ஓர் அங்கமே. ஆனால் உலகப் பிரசித்தி பெற்ற பாடும் மீன்களைக் கொண்ட வாவியை உடைய மட்டக்களப்பு நகரம், கிழக்கிலங்கை முழுவதற்குமே சொந்தமானது. 'பாடும் மீன்' என்னும் பெயர் தனிப்பட்ட எதையும் குறிப்பிடும் ஒரு சொல்லல்ல. எனவே கொழும்பிலிருந்து மட்டக்களப்பு, திருக்கோணமலை ஆகிய இடங்களுக்கு ஆரம்பிக்கப்படவிருக்கும் கடுகதி புகையிரதத்திற்குப் 'பாடும் மீன்' என்றே பெயரிடுக. இப்பெயர் இக்கடுகதிப் புகையிரதத்திற்கு ஒரு தனிச் சிறப்பை ஏற்படுத்தும்.''

இவ்வாறு பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராசமாணிக்கம் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு, திருக்கோணமலை ஆகிய இடங்களுக்கு ஆரம்பிக்கப்படவிருக்கும் கடுகதிப் புகையிரதத்திற்குப் பெயர் சூட்டுவதில் ஏற்பட்டிருக்கும் சர்ச்சை குறித்துத் தம் கருத்தைத் தெரிவிக்கும்படி கேட்டிருந்த போக்குவரத்து அமைச்சரின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அக்கடிதத்தில், பெயர் சர்ச்சைகொண்டு, இக்கடுகதிச் சேவையைத் தாமதித்தல் ஆகாதென்றும் இம்மாத இறுதியிலோ அல்லது மே மாத ஆரம்பத்திலோ இச்சேவை ஆரம்பிக்கப்படவேண்டும் எனவும் இப்புகையிரதத்திற்குக் குளிர்சாதன வசதி உள்ள ஒரு பெட்டியும் இணைக்கப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# 'சுபீட்சமான வாழ்வுக்கு சமயப்பற்று அவசியம்''

## உதவி அரசாங்க அதிபர் பேச்சு

யாழ்ப்பாணம், செவ்.

"சமாதானம், சிரமதானம், விளையாட்டு, கலை, கலாச்சாரம், சமுகத் தொண்டு ஆகியவற்றில் அதிக ஈடுபாடு காட்டி வரும் இன்றை தமிழ் இளைஞர்கள் சமய வளர்ச்சியிலும் அதிக அக்கறை காட்ட வேண்டியது அவசியமாகும் எத்தனை இடையூறுதான் ஏற்பட்டாலும் ஒற்றுமையும் விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் இளைஞர்களால் எதையுமே சாதிக்காமல் விடமுடியாது''

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர். திரு. ரி. முருகேசம்பிள்ளை இவ்வாறு தெரிவித்தார்.

கொக்குவில் பொற்பதி இந்து இளைஞர் சங்கத்தினதும், விநாயகர் சனசமூக நிலையத்தினதும் முதலாவது ஆண்டுவிழா கொக்குவில் நாமகள் வித்தியாசாலையில் நடைபெற்றது. விழா ஆரம்பமாவதற்கு முன்னர் அனைவரும் பொற்பதி விநாயகர் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்கள்.

சங்கத் தலைவர் திரு. அ. இராமநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை கொக்குவில் கிராம சபைத் தலைவர் திரு. சி. க. சபாபதி குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

திரு. முருகேசம்பிள்ளை மேலும் பேசுகையில் நாட்டின் எதிர்கால சுபிட்ச வாழ்வுக்கு இளைஞர்களது உழைப்பும், கடமையும் இன்றியமையாதது என்றும் இதற்காக சமயப்பற்றுடன் சேர்ந்த வாழ்க்கையை இளைஞர்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் எஸ். பரம்சோதி, பூரணம்பிள்ளை, ஆசிரியை திருமதி சதாசிவம் ஆகியோரும் பேசினார்கள் செல்வன். மு தியாகராஜா நன்றி தெரிவித்துப் பேசினார். கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (கா. நி

# "ஒன்றுபட்ட உழைப்பே திருமலையில் விவசாய வெற்றிக்குக் காரணம்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லம், சிங்களம். விடுதி வசதியுண்டு. தாமதமின்றி சேரவும், யுனைடெட் மகளிர் கல்லூரி, 107பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 954

யாழ்ப்பாணக் கல்வி நிலையம். கல்விப் பொதுத்தராதரப்பத்திர சாதாரண உயர்தர வகுப்புக்களும் (G. C. E. O. L. & A. L) சேதன இரசாயன பாட செயன்முறைப் பாடங்களும் (Organic Practicals) 28 4-69இல் ஆரம்பமாகும். 304/3 ஆசுப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 949


தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி ஆர்.-ஜெயலலிதா
நடித்த
ஆயிரத்தில் ஒருவன்

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெமினி - சாவித்திரி
நடித்த
மிஸ்ஸியம்மா

ராணி
[யாழ்ப்பாணம்]
[தினசரி 3காட்சிகள்]
* ஜெய்சங்கர்
* விஜயகுமாரி
நடித்த
ஜீவனம்சம்

2வது வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு)
வெலிங்டன், (யாழ். நகர்)
பிளாசா (வெள்ளவத்தை)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மற்றும் சினிமாஸ் திரைகளில்




கலைப்பேரரசர் எம். ஜி. ஆர்
ஆடலழகி ஜெயலலிதா
எம். ஆர். ராதா, நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடித்த
சரவணாபிலிம்ஸ்
சந்திரோதயம்
டைரக்ஷன்: கே. சங்கர்

மைலன்
(கொழும்பு)
எம் கே ராதா — ஜி வரலக்ஷ்மி
நடித்த
பாசவலை


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 22—4—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45துதிப்பாடல்கள், 7-10 உள்ளூர்ச் செய்திகள் 7-15 வாத்திய இசை, 7-30 படப்பாட்டுக்கள், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

12-00 செய்திச்சுருக்கம், 12-03 படப்பாட்டுக்கள், 1-00 மாதர் கேட்டவை.

344 மீ. அன் 61 மீ.

4-30கல்விஒலிபரப்பு 5-00 செய்திச் சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 கல்வி ஒலிபரப்பு, 5-45 படத்திலிருந்து.

6-15 நாட்டுப்பாடல்கள். 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 நிலைய ஒலிப்பதிவுகள், 7-35 தொழிலாளர்களுடன், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 இசைப் பயிற்சி, 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்திச்சுருக்கம்.

...றைய நிகழ்ச்சிகள்:

காலை 10-00 மணி: யாழ் மாவட்ட கிராமஅபிவிருத்தி சிறு கைத்தொழில் உதவி அதிகாரி 'கிராம அபிவிருத்தியும், சிறு கைத்தொழில்' பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

காலை 10-30 மணி: திருமதி கந்தவனம் 'கிராம அபிவிருத்தியில் பெண்களின் இடம்' பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

காலை 11-15 மணி: கிராம முன்னேற்றச் சிரேஷ்ட மேற்பார்வையாளர் 'கிராமத் தலைமைப்பீடம்' பற்றி சொற்பொழிவு நிகழ்த்து வதையடுத்து கலந்துரையாடல் நடைபெறும்.

மாலை 2 மணி முதல் கிராம முன்னேற்றப் பயிற்சிக் கழகப் பொறுப்பதிகாரி கமச்சேவை அதிகாரி திரு. க. பொ. குமாரசாமி ஆகியோர் முறையே 'குழுக்களும் தலைவர்களும்', கமக் குழுக்களின் கடமைகள்', 'சமூகத் தொண்டு' ஆகியன பற்றி உரை நிகழ்த்துவார்கள்.

கருத்தரங்கு தொடர்ந்து நாளையும் நடைபெறும்.

(கா. நி.)

கம் இறுதிநிகழ்ச்சியாக இடம்பெற்றது.

......

## காசோலை மோசடியாம்

### தந்தை மகள் மீது வழக்கு

யாழ்ப்பாணம், செவ்.

காசோலை மோசடி சம்பந்தமாக தந்தை ஒருவருக்கும், மகளுக்கும் எதிராக யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கை யாழ்ப்பாணம் விசேஷ இரகசிய குற்றத்தடுப்புப் பொலிஸ் பகுதியினர் தாக்கல் செய்துள்ளார்கள்.

திருக்கோணமலையில் தனிப்பட்ட வைத்தியசாலையொன்றின் நிர்வாகச் செயலாளராகக் கடமையாற்றும் ஒய்வுபெற்ற புகையிரத இலாகா அதிபர் ஒருவருக்கும் அவரது மகள் ஒருவருக்கும் எதிராகவுமே இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொட்டடியைச் சேர்ந்த பாலேஸ்வரி என்பவருக்கு சேமிப்பு வங்யிலிருந்து பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்ட 14,889 ரூபா பெறுமதியானகாசோலையை குறிப்பிட்ட தந்தையும், மகளும் மோசடி செய்ததாக இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ்வழக்கு ஜூன் மாதம் 25-ம் திகதி யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

(கா. நி.)

......

## திருடர் தொல்லை

புலோலி திங்கள்

புலோலி தெற்கில் திருடர் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது சில தினங்களுக்கு முன் ஒரு வீட்டில் பட்டப்பகலில் திருடர் கோஷ்டி ஒன்று புகுந்து வீட்டில் உள்ள துணி மணிகளை சுளவாடி சென்றுள்ளார்கள். இந்த கோஷ்டியை கண்டுபிடிப்பதில் பருத்தித்துறை பொலிசாரும் புலோலி தெற்கு கிராம சேவையாளர் சேதுநாயகமும் தீவிர புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளார்கள்.

......

## ஏகமனதாகத்தெரிவு

திருகோணமலை, திங்கள்

சாம்பல்தீவு கிராமசபையின் உபதலைவராக திரு. செ. கோபால் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

...ல நடைபெற்றது. ...பேசினார். கலைநிகழ்ச்சிகளும் விழா ஆரம்பமாவதற்கு முன் நடைபெற்றன. (கா. நி...னர் அனைவரும் பொற்பதி

## "ஒன்றுபட்ட உழைப்பே திருமலையில் விவசாய வெற்றிக்குக் காரணம்"

### உதவி அரசாங்க அதிபர் பெருமிதம்

திருக்கோணமலை, திங்கள்

தீர்மானிக்கப்படும் திட்டங்களின் பிரகாரம் செயல்படுவதால் ஏற்படும் பிரயோசனம் விவசாயிகளுக்கே சாரும். திட்டங்களைச்செயற்படுத்தும் உத்தியோகஸ்தர்களுக்கு எவ்வித பிரதிபலனும் கிட்டப்போவதில்லை. ஏற்படுத்தப்பட்ட சில கட்டுப்பாடுகளின் மூலம் விவசாயிகள்செயல்பட்டுவருவதினுலேயே விவசாயத்தில் விளைவும் அதிகரித்துக் கொண்டேவருகின்றது. அரசாங்க அதிபரின் முயற்சி, சகஊழியர்களின் உதவி விவசாயிகளின் ஒத்துழைப்பு ஆகியவற்றினுலேயே திருக்கோணமலை மாவட்டம் விவசாயத்தில் பெருவிளைவைக் கண்டுவருகின்றது' என்று திருக்கோணமலை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சிவஞானம் கிளிவெட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில்நடைபெற்ற பொட்டியாபுரம் பற்று விவசாயிகளின் பொதுக்கூட்டத்தில் கலந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

## கடந்தஆண்டு சம்பியன்

திருக்கோணமலை உதைபந்தாட்டக் கழகம் நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 1968-ம் ஆண்டுச் சம்பியனுக 18 புள்ளிகளைப் பெற்ற சன்ரைஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியுள்ளது. ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

## கார் களவு

திருக்கோணமலை மத்திய வீதியைச் சேர்ந்த ஒருவருடைய 14 000 ரூபா பெறுமதியான மோறீஸ் மைனர் வாடகைக் கார் ஒன்று சென்ற செவ்வாயன்று பிற்பகல் ஹபறனையில் வைத்துக் கொள்ளையடிக்கப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். கார் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை,


# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சௌமிய ஆண்டு சித்திரை மாதம் 10-ம் நாள் (22-4-69) செவ்வாய்க்கிழமை மிதுனலக்கினமும் திருவாதிரை நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10-30 மணியளவில்

| வி. எஸ். ராகவன் அவர்களின் திருநிறைச் செல்வன் 'நடிகர் திலகம்' சிவாஜிகணேசன் [மதனுக்கும்] | கே. ஏ. தங்கவேலு அவர்களின் திருநிறைச் செல்வி ஜெயலலிதா [லலிதாவிற்கும்] |
|---|---|

# கலாட்டா கல்யாணம்

செய்ய ராம்குமார் பிக்சர்சாரால் நிச்சயிக்கப்பட்டு யாழ்.வின்ஸர் கலையரங்கில் நடைபெறும் திருமண வைபவத்திற்குத் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வந்திருந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிள்ளைக்குரியோர்:
ஏ. வி. எம். ராஜன்,
வி. கோபாலகிருஷ்ணன்,
சோ,
நாகேஷ்.

வரவேற்பாளர்:
வின்சர் ஸ்தாபனத்தார்
(கொண்டாட்டம் தொடர்ந்து நடைபெறும்)

பெண்ணுக்குரியோர்:
ஜோதிலஷ்மி,
குமாரி சச்சு,
மனோரமா,
தேவமனோகரி

சுன்னுகம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி
பழைய மாணவர் சங்க
ஆண்டுப் பொதுக் கூட்டம்

24-4-69 காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் மேற்படி சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் அதிபர் தலைமையில் இடம்பெறும்.

அதிபர் திரு. வி. சுப்பிரமணியம் B. A., B. Sc.; அவர்கள் 41 ஆண்டுகள் அரும் சேவையின் பின் இளைப்பாறும் போது அவரின் சேவைக்கு ஏற்ற உபசார விழா எடுப்பது பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்படும்.

பழைய மாணவர் அனைவரும் அன்பாக அழைக்கப்படுகின்றனர்.

மாவலி,
அளவெட்டி,
20-4-69

வ. பொன்னம்பலம்
செயலாளர்,
ஸ். ப. மா. சங்கம்.
1530

விற்பனையாகின்றது!

தடுப்புக்காவலில் நாம்....

★ அன்பு மகள் அன்பரசிக்கு, தடுப்புக்காவலில் நூறு நாட்களிருந்த புதுமைலோலன் எழுதிய மடல்கள்.
★ ஈழத்தமிழனின் அறப்போர்ப் பரணி—
★ தமிழரில்லமெங்கும் இருக்கவேண்டிய நூல்.
★ பரபரப்பாக விற்பனையாகிவரும் அரிய நூல்.

விலை ரூபா 2-00 வி. பி. பி. கவனிக்கப்படும். விற்பனையாளருக்குக் கழிவு தரப்படும்.

கிடைக்குமிடங்கள்;

அன்பு புத்தகசாலை
27D, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைக்கிளர்ச்சிகளை அடக்க பிரி. துருப்புகளுக்கு அழைப்பு

## வட அயர்லாந்து அரசு நடவடிக்கை

லண்டன் ஏப். 21

**வடஅயர்லாந்தில் குழப்பங்களை அடக்குவதற்கு பிரிட்டிஷ் துருப்புகள் அழைக்கப்பட்டுள்ளன. வடஅயர்லாந்தில் முக்கிய டங்களை பிரிட்டிஷ் துருப்பினர் காவல்புரிவார்கள்,**

சுமார் ஆறுமாத காலத்துக்கு முன் வடஅயர்லாந்தில் ஆரம்பமான சிவில் உரிமை போராட்டம் இந்த வார இறுதியில் மிகமோசமானகட்டத்தை எட்டியது. இதைத்தொடர்ந்தே பிரிட்டிஷ் ராணுவத்தை வட அயர்லாந்து அரசாங்கம் உதவிக்கு அழைத்திருக்கின்றது.

வட அயர்லாந்திலுள்ள ரோமன் கத்தோலிக்கர்களான சிறுபான்மை மக்கள் தங்களின் சிவில்உரிமைகளுக்காக போராட்டம் ஆரம்பித்திருக்கிறார்கள். இங்கு புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களே பெரும்பான்மையினர். வார இறுதியில் ரோமன் கத்தோலிக்கர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள். இந்த ஊர்வலம் தடை செய்யப்பட்டதால் பாதைகளில் அமர்ந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார்கள். அந்த சமயத்தில் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களின் கோஷ்டியொன்று அங்கு வந்தது. அதைத் தொடர்ந்து மிகமோசமான மோதல் ஒன்று நடைபெற்றது. இந்த மோதலை தடுக்க பொலிசாரும் இறங்கினார்கள். அதில் சுமார் 70 பேருக்கு மேற்பட்ட பொலிஸார் காயமடைந்தார்கள் மொத்தம் சுமார் 260 பேருக்கு மேல் இந்த மோதலில் காயமடைந்தார்கள்.

வாகனங்கள் எரிக்கப்பட்டன. குண்டுகள் வீசப்பட்டன. நாட்டின் பிரதான தண்ணீர் விநியோகம் தடைபட்டது. இவைகளைத் தொடர்ந்துவடஅயர்லாந்து மந்திரிகள் அவசரமாகக்கூடி நாட்டின் பிரதான இடங்களைக் குழப்பக்காரர்களிடமிருந்து பாதுகாப்பதற்காக பிரிட்டிஷ் துருப்புகளை அழைப்பதென்று முடிவு செய்தார்கள்.

### வடஅயர்லாந்து

வடஅயர்லாந்துபிரிட்டிஷ் ராஜ்யத்துக்குட்பட்ட ஒரு நாடு. இங்கு சுமார் 1,478,000 மக்கள் வசிக்கிறார்கள். இதன் விஸ்தீரணம் 5,451 சதுர அடி. இங்கு மக்கள் சபை ஒன்றும் செனட் சபை யொன்றும் இருக்கின்றன. உள்ளூர் விஷயங்களைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை மாத்திரம் இந்த ஆட்சிமன்றம் நிறைவேற்றும். பிரதான விஷயங்கள் யாவும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் ஆட்சிக்குட்பட்டவை. பிரிட்டிஷ்மக்கள் சபைக்கு இங்கிருந்து 12 அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்படுகிறார்கள், இங்கு முன்னர் இயங்கிய ஐரிஷ் குடியரசுக்கட்சியும், சின்பீன் கட்சியும் அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்டுள்ளன. இங்கு புரட்டஸ்தாந்து மதத்தவர்களேபெரும்பான்மையினர் இந்த நாடு சமூக, மற்றும் பொருளாதார விஷயங்கள் யாவற்றிலும் பிரிட்டனையே பின்பற்றுகின்றது.

# 30 இஸ்ரேலியரைக் கொன்று குவித்ததாக எகிப்து கூறுகிறது

## ஒரே ஒருவர் காயமடைந்தார் என்கிறது இஸ்ரேல்

வெறிகொண்ட இளைஞன்

# பத்து பெண்களை சுட்டுக் கொன்றான்

இஸ்தான்புல், ஏப் 21

10 பெண்களை ஒருவர் சுட்டுக் கொன்றார் காதலில் தோல்வி கண்டதினால் ஏற்பட்ட ஆத்திரத்தில் இப்படி செய்தாராம்.

நெபினி எக்ஸ்ஸ் என்ற 22வயது வாலிபர் ஒரு பெண்ணைக் காதலித்தார். பெண்ணின் பெற்றோர் மணமுடித்துக் கொடுக்க மறுத்தனர். இதனால் ஆத்திரம் கொண்ட இவர் காதலியும் அவள் உறவினர்களும் வேலை செய்து கொண்டிருந்த வயலுக்குச் சென்று துப்பாக்கியால் ஆத்திரம் தீரு மட்டும் சுட்டார். இடைவிடாது சுட்டதில் 10 பெண்கள் பலியானார்கள்.

ஆனால் காதலியிடம் அவள் பெற்றோரும் காயங்களுடன் தப்பினார்கள். சம்பவம் பற்றி கேள்வியுற்று ஸ்தலத்துக்கு போனராணுவத்தினரும் வேறு வழியின்றி வாலிபரைச் சுட்டுக் கொன்றனர்.

# டுப்செக்கை ஆதரித்து மாணவர் ஆர்ப்பாட்டம்

## டாக்டர் ஹுசாக்கிற்கு முதல் சோதனை ஆரம்பம்

பிராக், ஏப். 21

செக்கோஸ்லவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் காரியதரிசிப் பதவியிலிருந்து திரு. அலெக்சாண்டர் டுப்செக் நீக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக பிராக் பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிருப்பு வேலைநிறுத்தம் ஒன்றை ஆரம்பிக்க முடிவுசெய்திருக்கிறார்கள்.

இந்த வேலைநிறுத்தத்தில் மற்றப் பல்கலைக்கழக மாணவர்களும் சேர்ந்துகொள்வது பற்றி ஒன்றும் தெரியவில்லை.

டாக்டர் குஸ்டாவ் ஹுசாக் பதவி ஏற்றுக் கொண்டபிறகு அவர் எதிர்நோக்கும் முதலாவது ஆர்ப்பாட்ட நிகழ்ச்சி இதுவாகும். நாட்டில் பதட்ட நிலை ஏற்பட்டதற்கு மாணவர்களையும் சில தொழிற்சங்கவாதிகளையும் டாக்டர் ஹுசாக் கண்டித்திருந்தார்

# பொறுப்பு எங்களுக்கு அதிகாரம் உங்களுக்கா?

## டில்லியிடம் கருணாநிதி கேள்வி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதுடில்லி, ஏப்ரல் 21

பொறுப்புக்களை மட்டும் மாநிலங்கள் மீது சுமத்தி அவ... பொருளாதாரத்துறையின் பல்வேறு பிரிவுகளில் மத்திய அரசு எடுக்கும்

# காப்பாற்றச் சென்றவரும் மூழ்கினர்

புதுடில்லி, ஏப்ரல் 21

பம்பாயில் கடற்கரையில் பொழுதுபோக்கச் சென்றிருந்தசிறுவர்கள் கோஷ்டியொன்றைச் சேர்ந்த 5 பேரும் அவர்களைக் காப்பாற்றப் போன இரு இளைஞர்களும் மூழ்கிமரணமானார்கள்.

கடற்கரையில் இருந்த சிறுவர்களை திடீரென அலைகள் இழுத்துச் செல்லத் தொடங்கின. இதைப் பார்த்த இளைஞர்கள் இருவர்உடனே குதித்து 5 பேரைக் காப்பாற்றினார்கள். ஆனால் இறுதியில் அவர்களும் மூழ்கி மரணமானார்கள் மொத்தம் ஏழுபேர் மரணமானார்கள்.

# ஆந்திரா தலைவர்கள் திருப்தி

புதுடில்லி, ஏப்ரல் 21

பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி சமர்ப்பித்த 8 அம்சத்திட்டம் பெரும்பாலான ஆந்திரா தலைவர்களை திருப்திசெய்திருப்பதாக ஆந்திரா முதல்வர் திரு. பிரமானந்தரெட்டி புதுடில்லியில் தெரிவித்தார்.

நிருபர்கள் கூட்டமொன்றில்பேசிய திரு.பிரமானந்த ரெட்டி தொடர்ந்து பேசுகையில், 'தெலிங்கானா தனி நாடு அமைப்பது எவ்வகையிலும் சாத்தியமாகாது இக்கோரிக்கையை முன்வைதது வன்முறைகளில் ஈடுபட்டுள்ள ஒரு சிறுபான்மை மக்களின் கருத்து, நாட்டு மக்கள் சகலரினதும் கருத்தைப் பிரதிபலிப்பதாக அமைய மாட்டாது' என்று குறிப்பிட்டார்.

......

நாயும்-பாம்பும்

# ஜீவமரண போராட்டம்

ரங்கூன், ஏப். 21

ஐராவதி ஆற்றுவடி நிலப் பகுதியிலுள்ள கியைக்கிலாந்து என்ற ஆற்றோர ஊரிலுள்ள ஒரு குடும்பத்தார் தமது நாய் செத்ததற்காக மிகவும் வருந்திக்கொண்டிருக்கின்றனர்.

ஏனெனில், அவ்வீட்டை நோக்கி வந்த ஒரு பெரிய

# 'ஈழநாடு' முதலெழுத்து விகடப் போட்டி - (1)

இது மிகவும் நவீனமான ஒரு போட்டி. வேறு எந்த பத்திரிகையிலாவது இப்படி ஒரு போட்டியை நீங்கள் பார்த்திருக்கமுடியாது. இதில்வெற்றிபெறுவதற்கு நீங்கள் புத்தகங்களையும் அகராதிகளையும் புரட்டவேண்டியதில்லை. உங்கள் சொந்த சாமர்த்தியத்தாலும் உங்கள் நகைச்சுவை உணர்ச்சியாலும் வெற்றி பெறக்கூடிய மிக எளிதான போட்டி. இனிப் போட்டி விபரங்களைப் பார்ப்போம்.

### விபரங்கள்

எழுத்து சிக்கனத்துக்ாக சங்கங்கள், சபைகள், கழகங்களின் பெயர்களை அவற்றின் முதலெழுத்துகளைக் கொண்டே எழுதுகிறோமல்லவா? உதாரணமாக, ஐக்கிய நாடுகள் சபையை ஐ. நா. சபை என்றும், திராவிட முன்னேற்றக் கழகத்தை தி. மு. க. என்றும் குறிப்பிடுகிறோம்.

ஆனால் சில சமயம் கேலியோ கிண்டலோ செய்வதற்காக அந்த முதல் எழுத்துகள் வரக்கூடிய வேறு சொற்களையும் உபயோகிக்கிறோம். உதாரணமாக, இலங்கை போக்குவரத்து சபையின் இ. போ. ச.வை மாற்றி 'இதில் போவது சங்கடம்' என்று சிலர் கிண்டல் செய்கிறார்கள்.

### நீங்கள் செய்ய வேண்டியது

இந்த முதலாவது முதலெழுத்துப் போட்டியில் நீங்கள் செய்யவேண்டியது இது தான்.

இ. ஒ. கூ என்பது இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் முதலெழுத்து சுருக்கம். நீங்கள் இ. ஒ. கூ. என்ற முதல் எழுத்துகள் வரக்கூடியதாக வேறு சொற்களை அமைத்து ஒரு புதிய பெயரை எழுதித்தரவேண்டும். இப்பெயர் உயர்தரமான நகைச்சுவையுடையதாய், கீழ்த்தரமான கேலி இல்லாததாய், ஆபாசமில்லாததாய் இருக்க வேண்டும். அதைப் பார்த்தவுடனே மனதில் துவேஷமோ அருவருப்போ இருக்கப்படாது. ஆனால் வயிறு குலுங்க சிரிக்கவைக்கும் அர்த்தபுஷ்டி உள்ளதாய் இருக்கவேண்டும்.

### போட்டி நிபந்தனைகள்

1. ஒருவர் எத்தனை விடைகளையாவது எழுதி ஒரே உறையில் போட்டு அனுப்பலாம். பெயர் வில சங்களைத் தெளிவாக எழுத வேண்டும்.

2. விடைகளுடன் கூட இப்பத்தியின் அடியில் காணப்படும் கூப்பன் ஒன்று கத்தரித்து நிரப்பி அனுப்பவேண்டும். கூப்பன் இல்லாத விடைகள் ஏற்றுக்கொள்ளப்படா.

3. விடைகள் வருகிற 25-ம் திகதிக்கு முன் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். அனுப்பும் விலாசம்: முதல் எழுத்துப் போட்டி - (1), 'ஈழநாடு' மே/பா., த. பெ. இல. 49, யாழ்ப்பாணம். 'ஈழநாடு' காரியாலயத்திலுள்ள தபால் பெட்டியிலும் விடைகளைச் சேர்க்கலாம்.

4. போட்டிக் குழுவின் தீர்ப்பு முடிவானது, இதுசம்பந்தமாக கடிதப் போக்கு வரத்து வைத்துக்கொள்ளவேண்டாம்.

5. 'ஈழநாடு' காரியாலயத்தில் பணியாற்றுபவர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் இப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது,

6 போட்டியில் வெற்றி பெறுபவரின் பெயரும் விலாசமும் இரண்டாவது முதலெழுத்துப் போட்டி 30-4-69-இல் வெளியாகும்போது தெரிவிக்கப்படும். அவருக்குரிய பரிசுப்பணம் விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

7. மிகச்சிறந்த விடைக்கு ரூபா பத்தும் அடுத்ததற்கு ரூபா ஐந்தும் பரிசுப்பணங்களாக வழங்

# குவித்ததாக எகிப்து கூறுகிறது

## ஒரே ஒருவர் காயமடைந்தார் என்கிறது இஸ்ரேல்

கெய்ரோ, ஏப். 21

நேற்று பல தடவைகள் இஸ்ரேலியத் துருப்புகளும் ஜோர்டானிய எகிப்திய படைகளும் பல தடவைகள் மோதிக்கொண்டார்கள்.

சூவேஸ் கால்வாய்க்கு குறுக்கே ஐக்கிய அரபுக் குடியரசுப்படைகளுக்கும் இஸ்ரேலியருக்குமிடையில் நடைபெற்ற சண்டையில் குறைந்தது 30 இஸ்ரேலியரைக் கொன்றுவிட்டதாக அல்லது காயத்துக்குள்ளாக்கியதாக அரபுத்தரப்பினர் கூறினார்கள். ஆனால் தங்கள் தரப்பில் சேதம் எதுவுமில்லையென்றும் ஒருவர் மட்டும் சிறுகாயங்களுக்குள்ளாகியதாக இஸ்ரேலியர் கூறியிருக்கிறார்கள். எகிப்திய கொமாண்டோ துருப்பினர் ஆரம்பித்த ஒரு முற்றுகையை நிர்மூலமாக்கி அவர்களை அடித்துத் துரத்திவிட்டதாக இஸ்ரேலியர் கூறினர். தாக்குதல் நடத்திய பின் தமது படையினர் பத்திரமாகத் திரும்பியதாகவும் மூவர் மாத்திரம் சிறு காயங்களுக்குள்ளானதாக வும் அரபுத்தரப்பினர் கூறினார்கள்.

ஜோர்டான் நதியின் வட பிரதேசத்தில் இஸ்ரேலியர் தாக்குதல் ஒன்றை முடுக்கியதாகவும் ஜோர்டான் படையினர் திருப்பித்தாக்கியதாகவும் அம்மானில் அறிவிக்கப்பட்டது. கடந்த இருபத்திநான்கு மணிநேரமும் அரபுப்படைகளுக்கும் இஸ்ரேலியருக்குமிடையில் அடிக்கடி சண்டை நடைபெற்றுக் கொண்டேயிருந்ததாக பார்வையாளர்கள் கூறினார்கள்.

# அதிகாரம் உங்களுக்கா?

## டில்லியிடம் கருணாநிதி கேள்வி

புதுடில்லி, ஏப்ரல் 21

பொறுப்புகளை மட்டும் மாநிலங்கள்மீதுசுமத்தி அவற்றை நிறைவேற்றும் வலிமையான அதிகாரத்தைமத்திய அரசுமட்டும் வைத்துக் கொள்வது சரியாகாது என்றுதமிழ்நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதி தேசிய அபிவிருத்தி சபையில் பேசுகையில் வலியுறுத்தினார்.

தேசிய அபிவிருத்தி சபையில் நான்காவது திட்டத்தின்மீது தமிழில் பேசிய முதல்வர் இத்திட்டத்தைப் பற்றி இன்னும் விரிவாகவும் ஆழமாகவும் ஆராய வேண்டும் என்றார். இந்த மன்றத்தில் தமிழில் உரை நிகழ்த்தப்படுவது இதுவே முதல்தடவை.

மத்திய மாநில அரசுகள் விதிக்கும் வரிகளை செலுத்துகிற மக்களுக்கு, மத்திய அரசைவிட மாநில அரசுகளிடம் நெருங்கிய தொடர்புண்டு.

பொருளாதாரத்துறையின் பல்வேறு பிரிவுகளில் மத்திய அரசு எடுக்கும் முயற்சிகளைச் செயல்படுத்தும் பொறுப்பும் முடிவில் மாநிலங்கள்மீதே விழுகின்றன. அத்தகைய பொறுப்புக்களை மட்டும் மாநிலங்களின்மீது சுமத்தி அவற்றை நிறைவேற்றும் வலிமையான அதிகாரத்தைமத்திய அரசு மாத்திரம் வைத்துக் கொள்வது சரியாகாது என்றார் அவர்.

நாடு முழுமைக்கும் உரியதுமான ஒரு திட்டத்தை முதல்அமைச்சர்கள் அடங்கிய இம்மன்றம் இருநாட்களில் ஆராய்ந்து முடிவுசெய்வது என்பது ஒரு சம்பிரதாயத்தின் அடையாளமாக அமையுமேதவிர ஆக்க பூர்வமான வெற்றியைத் தருமென்று எதிர்பார்க்க முடியாதென்றார்.

...லுள்ள ஒரு குடும்பத்தார் தமது நாய் செத்ததற்காக மிகவும் வருந்திக்கொண்டிருக்கின்றனர்.

ஏனெனில், அவ்வீட்டை நோக்கி வந்த ஒரு பெரிய நச்சு நீர்ப்பாம்மை எதிர்த்துச் சண்டை செய்து அந் நாய் இறந்தது.

நாய் குரைத்ததையும், சண்டை நடந்த சப்பத்தையும் இரவில் அவ்வீட்டார் கேட்டனர். ஆயினும், விடிந்த பிறகுதான் என்ன நடந்ததுஎன்பதைஅவர்கள்அறிந்தனர்.

வீட்டிற்கு வெளியே ஒரு பாம்பு நாயைச் சுற்றிக் கொண்டு கிடந்ததைக் கண்டனர். இரண்டும் செத்துக் கிடந்தன.

நாயின் கூரிய பற்குறியும், நகக்குறியும் பாம்பின் தலைமீதும், இதர பாகங்களிலும் பதிந்திருந்தன. நாயின் உடம்பிலிருந்த பல கடிகளைப் பார்த்தால், அது பாம்பினால் பல முறை கடியுண்டு செத்தது என்பது தெரிந்தது.

வீட்டுக்குள்ளிருந்து இரவில் வீட்டார் கேட்ட ஓசைகளிலிருந்து, இந்தஜீவமரணப் போராட்டம் அரை மணி நேரத்திற்குமதிகமாக நடந்தென்பது தெரிகிறது.

......

6. போட்டியில் வெற்றி பெறுபவரின் பெயரும் விலாசமும் இரண்டாவது முதலெழுத்துப் போட்டி 30-4-69-இல் வெளியாகும்போது தெரிவிக்கப்படும். அவருக்குரிய பரிசுப்பணம் விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

7. மிகச்சிறந்த விடைக்கு ரூபா பத்தும் அடுத்ததற்கு ரூபா ஐந்தும் பரிசுப்பணங்களாக வழங்கப்படும்.

**'ஈழநாடு'**

**முதலெழுத்துப் போட்டி-(1)**

பெயர் : ..............................

விலாசம் : ..............................

..............................

..............................

திகதி : ..............................

# பூரி சாமியாருக்கு கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவு

## தீண்டாமையை ஆதரித்து பேசியதின் எதிரொலி

பட்னு, ஏப். 21

**பூரிசங்கராச்சாரியாரைக் கோர்ட்டில் ஆஜராகும்படி பட்னு முதல் தரப்பு மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டிருக்கிறார்.**

கடந்தமாதம் 29ம் திகதி தீண்டாமையை ஆதரித்து பூரிசங்கராசாரிய சுவாமிகள் பேசியதையொட்டியே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது பட்னு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் எதிர்வரும் வியாழக்கிழமை ஆஜராக வேண்டும் என்று பூரி சங்கராச்சாரியாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தீண்டாமையை அனுஷ்டிக்க வேண்டும் என்று பூரி சங்கராச்சாரியார் கடந்த மாதம் 29ம் திகதி பேசியதாகச்செய்திகள்வெளியானதைத் தொடர்ந்து இந்தியா முழுவதும் அவருக்கு எதிர்ப்புக் கிளம்பியது. அவர்மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல மாநிலங்களில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்திய ஆட்சிமன்றத்திலும் பல அங்கத்தவர்கள் கண்டித்தார்கள். அரசியல் சாஸனத்துக்கே விரோதமாக அவர் பேசியிருப்பதாக உள்துறை அமைச்சர் திரு. சவான் கூறினார்.

தீண்டாமை அனுஷ்டிப்பது இந்தியாவில் சட்ட விரோதமாக்கப்பட்டிருக்கின்றது.

பூரிசங்கராச்சாரியார் முன்னர் பசுவதையை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர். இப்பொழுதும் பசுவதை எதிர்ப்பு போராட்டம் ஒன்றினை நடத்த அவர் திட்டமிட்டிருக்கின்றார்.

மனிதர்களைவிட மிருகங்களின் நலனில்தான் அவர் அதிகம் அக்கறை கொண்டிருக்கிறார் என்று பலர் அவரைக் கண்டித்திருக்கிறார்கள்.

பூரிசங்கராச்சாரியாரின் தீண்டாமை ஆதரவுபற்றிய பேச்சுப்பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி பட்னு சட்ட அதிகாரி ஒருவரும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றார்.

பட்னுவில் தாம் பேசியது திரிக்கப்பட்டிருப்பதாகவும் உயர்சாதிக்காரர்கள் மத்தியிலும் தீண்டாமை இருக்கிறதென்றும், உண்மை ஹரிஜனர்களுக்குத் தாம் எப்போதும் சேவைபுரியக் காத்திருப்பதாகவும் பூரிசங்கராச்சாரியார் சமீபத்தில் வெளியிட்ட ஒரு அறிக்கையில் கூறியிருந்தார்.

# நைஜீரிய அமைதி முயற்சி தோல்வி

லைபீரியா, ஏப். 21

நைஜீரிய உள்நாட்டுச் சண்டைக்கு ஒரு தீர்வு காணும் நோக்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்திய ஆபிரிக்கத் தலைவர்கள் தமது முயற்சியில் தோல்வியடைந்திருக்கிறார்கள்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் எதியோப்பிய சக்கரவர்த்தி ஹைலி சலாசியின் தலைமையில் நடைபெற்றது.

நைஜீரிய அமைதிக்கான தீர்மானங்கள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. ஆனால் இவைகளை பியாப்ராவின் பிரதிநிதிகள் பின்னர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். நைஜீரிய அமைதிக்கான யோசனைகளை ஏற்றுக் கொண்டிருப்போம் ஆனால் நைஜீரிய அமைதிக்கு நைஜீரிய ஒற்றுமை முன்நிபந்தனையாக விதிக்கப்பட்டதினாலேயே இது முடியாமல் போய்விட்டதாக பியாப்ராவின் முக்கிய நகரான உமுஹையா மீது நைஜீரிய படைகள் குண்டுகள் வீசிக்கொண்டிருப்பதாக ஏற்கனவே செய்திகள் வந்துள்ளன.

# சைவவாலிபர்கள் மாதர் மகாநாடு

## இம் மாதம் 24-ம் திகதி

யாழ்ப்பாணம், செவ்.

இம்மாதம் 23-ம் திகதி தொடக்கம் 3 நாட்கள் தொடர்ந்து நடைபெறவிருக்கும் சைவமகாநாட்டின் முக்கிய நிகழ்ச்சியாக சைவ வாலிபர் மாநாடும். சைவ மாதர் மாநாடும் நடைபெறவிருக்கின்றது.

இரண்டு நிகழ்ச்சிகளும் இரண்டாம் நாளான 24-ம் திகதி நடைபெறவிருக்கின்றது. பண்டித வித்வான் க. கி. நடராஜன் தலைமையில் நடைபெறும் சைவ வாலிபர் மாநாட்டில் நாவலர் பெருமான் பற்றிய கருத்தரங்கம் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் க. சிவராமலிங்கம், 'நாவலர் உரை நடை' பற்றியும், க. சொக்கலிங்கம் 'சமய கண்டனம்' பற்றியும் மு. தியாகராசா 'நீதிக் கருத்துக்கள்' பற்றியும், சைவப்புலவர், க. சிற்றம்பலம் 'சமய வாழ்க்கை' பற்றியும், திரு. வ. சிவதாசன் புராணக் கருத்துக்கள் பற்றியும், திரு. இ. மகாதேவா (தேவன்) 'சைவ உணவின் சிறப்புப் பற்றியும் உரை நிகழ்த்துவார்கள்.

திருமதி இரசேஸ்வரி வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும் சைவ மாதர் மாநாட்டில், பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், பண்டிதை அமிர்தாம்பிகை சதாசிவம், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்

(கா. நி.)

## 12 பெண்கள் கைது

ஹைதராபாத், ஏப். 21

தெலுங்கானு போராட்டத்தில் ஈடுபட்ட 12 பெண்கள் நேற்றுக் கைதானார்கள். ஆந்திர கல்விமந்திரியின் வீட்டின்முன் இவர்கள் 'தர்னு' அனுஷ்டித்தார்கள்.

.....

ஆசிரியர் வேலைநிறுத்தம்

## பீஹாரில் 192 பேர் கைது

புதுடில்லி, ஏப். 20

கிராக்கிபடியை அதிகரிக்க கோரி பீஹாரில் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தஆசிரியர் சிலரைபொலிசார்கைது செய்தனர். ஆசிரியர்களின் 12ம் நாள் வேலைநிறுத்தமான நேற்று கைது செய்யப்பட்டவர்களோடு இது வரை கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 192 என அறிவிக்கப்பட்டது.

## ஓவியம் திருட்டு

லண்டன், ஏப். 21

15-ம் நூற்றுண்டின் புகழ்பெற்ற செரி ஜேனுவின் ஓவியம் இன்றுதிருட்டுப்போய்விட்டதாக அறிவிக்கப்பட்டது. இவ் ஓவியத்தின் பெறுமதி சுமார் 60 லட்சம் ரூபாவாகும்.

## தாக்கப்பட்டார்

திருகோணமலை, திங்கள்

கோடரி ஒன்றினுல் வெட்டப்பட்ட நபர் ஒருவர் பலத்த காயங்களுடன் திருகோணமலை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கந்தளாய்க் குளத்தில் மாட்டுப்பட்டியொன்றில் இருந்த நண்பர்கள் புதுவருட தினத்தன்று மது அருந்தியதாகவும் போதை காரணமாக அங்கிருந்த நண்பர் இருவருக்கிடையே பலத்த வாக்குவாதம் முற்றி அருகில் இருந்த கோடரி ஒன்றினுல் ஒருவர் மற்றொருவரை வெட்டியதாகவும் சொல்லப்படுகிறது கந்தளாய் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

# நல்லைசம்பந்தர்' ஆதீனத்தில்

## பொற்தாள. ஞானப்பால் உற்சவம்

யாழ்ப்பாணம், செவ்.

நல்லூர் ஞானசம்பந்தர் மடாலயத்தில் நாளை புதன் கிழமையும், அடுத்து வியாழக்கிழமையும் ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமி மஹோற்சவம் நடைபெறவிருக்கிறது.

முதலாம் நாளான 22-ம் திகதிய நிகழ்ச்சிகள்:-

மாலை 4 மணி: ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமானுக்கு விசேஷ சோட சோப சார பூஜை.

மாலை 4.30 மணி: ஞானசம்பந்தப் பெருமான் நல்லூர் கந்தசாமி கோவில் வீதிவழியாச நல்லூர் கைலாச நாதசுவாமி கோவிலை அடைதல்.

மாலை 5.30மணி: ஞானப்பால் உற்சவம்.

இரவு 6.45 மணி: விடையாற்றுப் பூஜை, இரவு 7 மணிக்கு திருமுறைக் கச்சேரி.

இரண்டாம் நாளான23-ம் திகதிய நிகழ்ச்சிகள்:-

நல்லூர் கைலாச நாத கோவிலில் பொற்தான உற்சவம் காலை 8. மணி' (பூஜை காலை 9 மணி) ஆதீன மாணவ மாணவிகளின் சொற்பொழிவு. காலை 11. மணி. நாதஸ்வரக் கச்சேரி.

மாலை 6 மணி: பொற்தான உற்சவம் இரவு 7 மணி: முத்துப்பல்லக்கு உற்சவம். ஊர்வலம் நல்லூர் கைலாச நாதர் கோவிலிலிருந்து ஆரம்பமாகி ஆதீனத்தைச் சென்றடையும்.

இரவு 9 மணிக்கு திருமுறைக் கச்சேரி நடைபெறும். இரண்டு நாட்களும் திருமுறைக் கச்சேரியில் திரு. பொன். சுந்தரலிங்கமும், திரு. எம். வர்ணகுலசிங்கமும் கலந்து கொள்வார்கள்

(கா. நி)

# இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செவ்.

வண்ணை அரசடி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெற்றுவரும் யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபாவின் 18வது ஆண்டு இசை விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உதவிஅத்தியட்சகர் திரு. எஸ் கந்தவனம் தலைமையில் நடைபெறும். நிகழ்ச்சிகள் விபரம்:

மாலை 6-30 மணி: செல்வி மலர்தேவி இராஜசிங்கத்தின் இன்னிசை.

8-00 மணி: தலைமையுரை.

8-15 மணி: திரு. கே. வி. தம்புவின் ஏின்னிசை.

9-45 மணி: திரு. பரம் தில்லைராஜாவின் இன்னிசை.

(கா. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

செயல் வடிவத்தில் அஹிம்சை மிகுந்த வேகத்துடன் செல்கிறது. அப்போது ஓர் அற்புதமாகி விடுகிறது.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமியவருஷம் சித்திரை மாதம் 10-ந் திகதி (22-4 69)


## சைவ பரிபாலன சபை எண்பது ஆண்டு நிறைவு விழா

சைவ பரிபாலன சபையின் 80-ம் ஆண்டு நிறைவு விழாவுடன், அகில இலங்கை சைவ மகாநாடு யாழ்ப்பாணத்திலே நாளைக்கு ஆரம்பமாகி மூன்று நாட்கள் நடைபெறுகின்றது. எண்பது ஆண்டுகாலம் தொடர்ந்து நீடித்து பணி செய்து விழாக் கொண்டாடும் அச்சபையைப் பாராட்டுவதுடன், அதன் பணிகள் மக்கள் சமூகத்துக்கு மேன்மேலும் பயன்படும்படி வளர்ந்தோங்க வேண்டுமென்றும் வாழ்த்துகின்றோம்.

அந்நிய ஏகாதிபத்தியங்கள் இலங்கையை அடிமைப்படுத்தி, கோயில்களை இடித்தும், மதம் மாற்றியும், மக்கள் தங்கள் சமயாசாரப்படி வாழ்க்கை நடத்த முடியாமலும் கையாண்ட அடக்குமுறைக் கொடுமைகளுக்குக் கணக்கில்லை. யாழ்ப்பாண சரித்திரம் எனும் நூலிலே முதலியார் இராசநாயகமவர்கள் இவற்றை ஓரளவு விளக்கியுள்ளார்கள். 450 வருட அடிமைத்தனத்திலே, அக்கொடுமைகளுக்கெல்லாம் தப்பி, இங்கு சைவ சமூகம் இன்னும் உயிருடன் இருக்கிறதெனின் அதற்கு இறை அருளும், சைவ சமயத்திலுள்ள அடிப்படை உண்மைகளும், நாவலர் பெருமானின் வீரத்தொண்டுகளுமே முக்கிய காரணங்களாகும்.

பிறரைக் குறைகூறுவதால் பயனில்லை. நன்மையும்தீமையும் பிறர்தர வாரா என்ற பொய்யா மொழியின் படி, சைவ சமூகத்தின் இன்னல்களுக்கு அச்சமூகத்தில் புகுந்துள்ள சில தீமைகளே காரணமாக இருக்கவேண்டும். சிவம்என்ருல் அன்பு. மக்களிடம்மட்டுமன்றி, எல்லா உயிர்கள் மீதும் கூட அன்பு காட்ட வேண்டுமென்று கூறுவது சைவம். அதனுலேயே அதன் மாண்பு பெரிதென்பர். ஆனுல் இன்றைய சைவ சமூகத்திலே எல்லா உயிர்களிடத்திலும் இல்லாவிட்டாலும் சைவ சமூகத்தைச் சேர்ந்த

லும் பலர் ஆர்வம் காட்டுவதைப்பார்க்கின்ருேம்,

இதே சமயத்தில், சைவ சமயத்தை அவதூறு செய்து தாழ்மைப்படுத்தவும் பல சக்திகள் வேலை செய்து வருவதும் சைவ சமூகத்தில் பிளவுகளை ஏற்படுத்தி அதை அழிக்க முயற்சிகள் நடப்பதும் பகிரங்க ரகசியம். அரசியல் சுதந்திரம் கிடைத்தும் சைவ சமூகத்துக்கு ஆபத்து நீங்கிவிடவில்லை. சமூகம் கட்டுப்பாடாக அன்பினுல் தெய்வத்தின் பெயரால் ஒற்றுமைப்பட்டால் தான், அது அந்த வெளி ஆபத்துக்களை எதிர்த்து சமாளிக்கவும் முன்னேறவும் முடிவதாக இருக்கும்.

சமய சமூக விஷயங்களில் கருத்து வேற்றுமைகள் ஏற்படுவது இயல்பு. ஆனுல் ''மேன்மை கொள் சைவ நீதி'' யான அன்பை அடிப்படையாகக் கொள்வதாயின் இந்த வேற்றுமை சிக்கல்கள் சுமுகமாகத் தீர நிச்சயம் வழி பிறக்கும் மக்களுக்காகத்தான் சமயமும் கோவிலுமே யன்றி, சமயத்துக்காக மக்களல்ல. சமூகத்திலுள்ள பல குறைகளை நிறை செய்ய, கோயில்களும் சமய ஸ்தாபனங்களும் செய்யக் கூடிய காரியங்கள் பல உண்டு. காலப்போக்கையும் தேவையையும் உணர்ந்து, அன்பெனும் விரிந்த அடிப்படையிலே பசிதீர்த்தல், மருத்துவம், கல்வி, குடியிருப்பு, முதலிய பல பல தேவைகளையும் பணத்துக்காகஅன்றி, அன்பெனும் தெய்வத்துக்காகப் பூர்த்தி செய்வதாயின் சமய நம்பிக்கை மக்களுக் பெருகும். சமயப் போட்டிகளையிட்டு, எல்லாச்சமயங்களும் இவ்விஷயத்தில் ஒத்துழைக்க எவ்வளவோ இடமுண்டு.

சைவ சமூகத்திலே சாதி இறுமாப்பும், வேற்றுமைகளும் புகுந்து உலகமே சிரிக்குமளவுக்கு நிலைமை எவ்வளவு தூரம் மோசமாகியுள்ளதென்பதை விளக்கத்தேவையில்லை. ''அந்தணன் அந்

உலக அதிசய நாடக மாமேதை வில்லியம் ஷேக்ஸ்பியர் தினம் நாளை உலகெங்கும் கொண்டாடப்படும்

# இனிமை தவழும் அவன் பட்டினத்தின் அன்னம்

— எம். ரி. சிவம் பி. ஏ. —

மனித இயல்பின் ஒவ்வொரு அம்சத்தையும் எள்ளளவும் தவறவிடாது நுணுகி நுணுகி ஆராய்ந்தறிந்து மிக அற்புதமான ஆங்கில நடையில் உலகத்திற்கு அருளிய ஷேக்ஸ்பியர் தோன்றி இவ்வருடத்துடன் 405 ஆண்டுகளாகின்றன. இவ்வுலகம் சிரஞ்சீவியாயிருப்பின் ஷேக்ஸ்பியரின் அறிவு கடைந்தெடுத்த 37 நாடகங்களும் உலக இலக்கியத்துறையின் எத்தகைய திருப்புமுனைகளையும் தாண்டி முன்னணியில் நிற்கவல்லன. இற்றைவரை கல்லூரி-சர்வகலாசாலைக் கல்வி ஆயிரமாயிரம் மேதைகளை உருவாக்கிய போதிலும் மாமேதை ஷேக்ஸ்பியரைப் போன்ற ஒருவரை மாணவனுகப் பெறப் பேறு எய்தவில்லை. உலகத்தை எல்லையற்ற வியப்பில் ஆழ்த்திய மாமேதைகள் பலர், கல்விக்கூடங்களின் வெறும் சரக்குகள் என்ற மட்டரகமான வீம்புக்கு அப்பாற்பட்டவர்களே.

'ஸ்ராட்போட்-அவ்ன்' என்னும் ஒரு சிறிய பட்டினத்தில் 1564ம் ஆண்டு, சித்திரை 23ல் ஷேக்ஸ்பியர் பிறந்தார். அவர் பிறந்த ஆண்டு, மாதம், தேதி ஆகியன பற்றி இதுவரை வந்துள்ள ஊகங்களுள் மேற்கூறிய காலமே பெரும்பாலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. அவரது தகப்பனுரான ஜோன் ஷேக்ஸ்பியர் மதிப்பும், சுமாரான வருவாயுமுள்ள ஒரு குடும்பத்தினர். கம்பளி, தோல், தானியம் ஆகிய பண்டங்களில் திருப்திகரமான வணிகஞ்செய்து நன்ருகச் சம்பாதித்தார். சிறு பிராயத்தில் வில்லியம் ஷேக்ஸ்பியர் கவலையற்ற வாழ்க்கையை அனுபவித்த ஒருவரென்றே நாம் கருதவேண்டியிருக்கின்றது.

பதினுன்கு வயதுவரை ஷேக்ஸ்பியர் ஆரம்பக் கல்விக்கூடத்தில் (கிறமர் பாடசாலை) பயின்ருரென நம்பகமாக அறியக்கிடக்கின்றது இதன் பின்னர் தகப்பனுரின் வணிக முயற்சிகளில் கைகொடுத்துதவப் படிப்பைக் கைவிட நேரிட்டது. பதினுன்கு வருடங்கள் ஓர் ஆங்கில நாட்டு மாணவன் பாடசாலையில் கற்பனுகில் அவன் சுமாரான அறிவைப் பெற்றிருப்பானென அவரது விமர்சகர் பலர் கருதுவதுமுண்டு. எனினும் இப்பதினுன்குவருடங்களில் ஷேக்ஸ்பியரிடம் மாமேதைக்குரிய

நிம்மதியற்றவராயும், விஷமக்காரராயும் மாறிவிட்ட ஷேக்ஸ்பியருக்கு லண்டனில் என்ன வாய்ப்புக் கிடைக்கப் போகின்றதென அவர் உட்படப் பலரும் முகம் சுளித்தனர். ஆனுல் குளோப் நாடகக்கொட்டகை' ஏதோ ஓர் அற்ப சந்தர்ப்பத்தையாவது அளிக்க முன்வந்ததையிட்டுப் பலரும் வியப்புற்றனர். நாடகக்கொட்டகைக்கு வருகைதரும் கனவான்களின் குதிரைகளைக் கண்காணிக்கும் கூலியாளராக கடமைபுரிந்தாரெனப் பலத்த கருத்து இன்னும் நிலவிவருவது மறுக்கற்பாலது. எப்படியாயினும் ஏதோ சொற்ப ஊதியமாவது கிடைத்தால் தன் வயிற்றுப்பாட்டைக் கவனித்துக் கொண்டு தீவிரமான எதிர்காலத் திட்டங்களில் ஈடுபடலாஞர். நாளடைவில் கொட்டகையில் நுழைந்து அங்கு என்னதான் நடக்கின்

எதுறன்பதைப் பார்ப்பதற்கும், பின்னர் மேடைத் திரைகளை ஒடுக்கவும், பரப்பவும் சிறு வாய்ப்புப் பெற்ருர். இது ஒரு மெல்லிய உயர்வு. பின்பு நடிகராகவும், அடுத்து நாடக ஆசிரியராகவும் உயர்ந்தார். வாழ்க்கையில் பல இன்னல்களை எதிர்நோக்கிய ஒருவர் மன விரக்திக்கு மட்டும் இடம் கொடாதுகொள்வாரேயாஞல் அவருக்கு எதிர்காலம் எப்படியாயினும் கை கொடுக்கத் தவறுவதில்லை என்பதற்கு ஷேக்ஸ்பியரின் வரலாறு சான்ருகும்.

சொந்தமாக நாடகங்களை எழுத, இவருக்குச் சில ஆண்டுகள் பிடித்தன. ஆனுல் அதற்கு முன்-பயிற்சியாகப் பிற நாடக ஆசிரியர்களின் நாடகங்களில் மிக முக்கிய துண்டுகளை எல்லாம் பிரித்தெடுத்து குளோப்கொட்டகையில் அரங்கேற்றக்கூடிய ஒழுங்கில் ஒட்டுகள் போட்டார். இந்த வேலை சுமார் இரண்டு வருடங்கள் நடைபெற்றிருக்கலாமென நம்பப்படுகிறது. இதன் பின்னரே தனது அசல் நாடகங்களை தொகுத்தார். நடிப்புத் துறையிலும் ஈடுபட்டதால் நாடகங்களைப் பாத்திரலயத்துடன் ரசிப்புத்தவழ எழு

தம நாடகங்களைச் *சமைத்து இங்கிலாந்தின் பொற்கால மாமேதையாஞர். திருச்சபைக் கட்டடத்தினுள்ளும், திருச்சபை முன்றலிலும், கனவான்களின் தோட்டக் குச்சுகளிலும், எழிலற்ற திறந்த வெளியரங்குகளிலும் முரட்டுப் பாணிதோய்ந்த கூத்துகளை மட்டும் சொரணையற்றுப் பார்த்துக் கிடந்த ஆங்கில நாட்டு ரசிகர்கட்கு ஷேக்ஸ்பியரின் பல்சுவை நாடகங்கள் வரப்பிரசாதமாயிருந்தன. 'காதலின் முயற்சியின் இழப்பு'' என்னும் நாடகமே இவரது கன்னிப் படைப்பு என பலர் ஊர்ஜிதம் செய்கின்றனர். இவரது நாடகங்கள் பிரசித்தி பெற்றதும் செல்வமும்பெருகிக் கொள்ளவே ஷேக்ஸ்பியர் இங்கிலாந்தின் பல சீமான்களின் இணைபிரியா நண்பஞஞர். பொற்காலப் பேரரசியாகிய முதலாம்

எலிஸபெத், ஷேக்ஸ்பியரின் நாடக வித்துவத்தை இடைவிடாது பாராட்டிக் கௌரவித்துக் கொண்டார். ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் 16-ம் நூற்ருண்டு இங்கிலாந்தின் இலக்கியப் பேரதிசயமென்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. மனித உணர்வுகளின் மிக உச்சக் கோடியையும் இறுதிக் கீழ்க்கோடியையும் வித்தகத் தன்மையுடன் தொட்டுத் தட்டிக் காட்டிய பெருமை ஷேக்ஸ்பியர் ஒருவருக்கே உண்டு.

ஷேக்ஸ்பியரின் 37 நாடகங்களை நான்கு காலகட்டங்களாகப் பேராசிரியர் டௌடன் பிரித்துள்ளார். 'வேலைத் தலத்தில்' 'உலகத்தில்', 'ஆழங்களுக்கப்பால்', 'உயரத்தின் சிகரத்தில்' என்பனவே அக்கால கட்டங்களாகும். முதலாவது கட்டம் 1588 — 1595 வரையாகும். இக்கட்டத்திலேயே ஆரம்ப நாடகங்களை எழுதிப் பயிற்சிபெறும் நிலைக்குள்ளாஞர். 11 நாடகங்கள் இக் காலகட்டத்தில் எழுதப்பட்டன. இந் நாடகங்களில் பலவற்றில் கருத்துச் செறிவுத் தட்டுப்பாடு காணப்பட்ட போதிலும் அவற்றின் இலக்கிய நடை கலகலப்பில் சளைத்தவையல்ல. நாடகவித்தகத் தன்

பெற்ற இன்பயியல், வரலாற்று நாடகங்கள் கடைந்தெடுக்கப்பட்டன. ஆறுவருடங்களுள் எல்லாமாக 10 நாடகங்கள் வெளியாயின. ஷேக்ஸ்பியரின் தனிப்பெரும் ஆற்றல் இக் கட்டத்திலே தான் பௌர்ணமித்தது. நடையழகும், கற்பனைச் செறிவும், அலங்கார நயமும் இந்நாடகங்களில் மிளிர்ந்தன. இக் காலகட்டத்துக் கற்பனை தன்னைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் மனிதர்கள், மாநிலம் பற்றியது; கற்பனையில் வேடிக்கைக்கோ, விசித்திரத்திற்கோ எள்ளளவும் இடம்இல்லாத நிலை. மூன்ருவது கட்டம் 1601 1608 வரையாகும். இக் கட்டத்திலேயே உலகத்தை மீளாத் துக்கவேதனையில் ஆழ்த்திய ஹாம்லட், ஒதெல்லோ இலியர் அரசன், மாக்பெத் ஆகிய துன்பியல் நாடகங்கள் தலை எடுத்தன. எல்லாமாகப் 10 நாடகங்கள் வெளியாயின. இந் நாடகங்களில் ஷேக்ஸ்பியரின் மகோன்னத பணிகள் கவனிக்கத்தக்கன. இந் நாடகங்கள்மூலம் மனித இருதயத்தின் மிக நுண்ணிய கதவுகள் திறக்கப்பட்டு மனித உணர்வுகள் பிரத்தியட்சப்படுத்தப்பட்டன. நான்காவது கட்டம் 1608-- 1612 வரையாகும். இக் காலத்தில் ஆறு நாடகங்கள் வெளியாகின. ஷேக்ஸ்பியரின் ஆற்றல் அமைதியான இலக்குகளை நோக்கும் திருப்பத்தை இந்நாடகங்கள் உணர்த்துவதா யமைந்தன. பலவேறு உணர்வுகளையும் வெளிக்காட்டிவிட்டு ஆத்மா அமைதி ஒன்றையே விரும்பித் திசைதிரும்புகின்றது. எவ்வகைச் சலனத்திற்கும் இடங்கொடாத மனே நிலையை மாமேதையும் இக் காலகட்டத்தில் அடைந்த தோடல்லாமல் 'மனிதனின் குறைகள் பதிந்த' தன்மையை அங்கீகரிக்காமல் இருக்க முடியாத பேருண்மையையும் இக் காலகட்டத்தில் போதிக்கத் தலைப்பட்டுவிட்டார்.

எல்லா நாடகங்களும் எழுதி முடிக்கப்பட்டன; ஷேக்ஸ்பியரும் பிறந்தகம் மீண்டும் செல்வாக்குடன் காலங்கழித்தார். தனது 52வது ஆண்டில் இல்வுலக வாழ்க்கையை நீத்து அப்பட்டினத்தின் பிரசித்தி பெற்ற கல்லறைக்குள்முடங்கிக்கொண்டார்.

## ஐயாறன் எழுதுவது

இம்முறை கொழும்புக்குச் சென்றிருக்கையில் ''ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு'' எனும்மேற்குஜெர்மனியைச் சேர்ந்த ஒரு சமஷ்டி உறுப்பின் பிரதமரை நேரில் கண்டு கதைக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

அவர் ஒரு பத்திரிகை ஆசிரியராக இருந்தவராம். இதை அறிந்ததும், பத்திரிகைத் தோழர் எனும் முறையில் தாராளமாகப் பேச முடிந்தது. அவரும் பத்திரிகைக்காரர் கேட்ட எல்லா கேள்விகளுக்கும் பொறுமையாகவும் தெளிவாகவும் பதிலளித்தார்.

மேற்கு ஜெர்மனி அரசாங்கம் தன் பெயரிலேயே 'பெடரல்' என்ற பெயரை சேர்த்திருப்பதால். அந்நாட்டில் 'பெடரல்' எனும் சமஷ்டி அரசியல் எவ்விதம் நடைபெறுகிறது என்று கேட்டேன். இலங்கையிலே 'பெடரல்' என்ற சொல்லைக் கேட்டதும் அலறி அஞ்சுகிருர்களல்லவா? அவர்களது பயம் தீரவே இதைக் கேட்டேன். தமது நாட்டில் சரித்திர காரணங்களாலேயே சமஷ்டி உறுப்புகள் அமைந்ததாயும், பேர்லின் உள்ளிட்டு 11 ராஜ்யங்கள் இருப்பதாகவும், சிற்சில குறைகள் இருப்பினும் இம்முறை செம்மையாகவே நடைபெறுவதாகவும் சொன்னுர்

இரண்டே உறுப்புகள் இருப்பின், போட்டி பொருமைகள் அதிகமாக இருக்கலாமென்றும், தம் நாட்டில் 11 சமஷ்டி உறுப்புகள் இருப்பதால் அந்தப் பிரச்னை வெகுவாக இல்லை என்றும் தெளிவுபடுத்திஞர் அவர்.

பத்திரிகை நிருபர் மகாநாடு முடிந்ததும் ஒரு பத்திரிகை அன்பர் என்னிடம் வந்து ''இனி நீங்கள் சமஷ்டி கேட்கமாட்டீர்கள் தானே'' என்ருர். இவருக்கு பதில் சொல்லத்தான் வேண்டுமா என்று சற்றே தயங்கினேன் ''இரண்டுக்கு மேலான உறுப்புகள் இருந்தால் பாதகமில்லை என்றுதானே ஜெர்மன் அமைச்சர் கூறிஞர் என்பதைச் சுட்டிக் காட்டி தமிழும் சிங்களமும் தேசிய மொழிகளாக பல வருடம் இருந்ததை ஏன் திடீரென 'சிங்களம் மட்டும்' என்று மாற்றினீர்கள். பழையபடி இரு மொழிகளையும் அரசாங்க மொழிகளாக்குவீர்களா?'' என்று அதே நிருபரை திருப்பிக் கேட்டேன். அவர் பதிலளிக்கவில்லை.

ஆனுல் மறுநாள் அவரது பத்திரிகையை பார்த்தேன்.

டுக்குமேல் உறுப்புகள் இருக்கலாமென்று அந்த அமைச்சர் கூறியதை அடியோடு மறைத்துவிட்டார். சமஷ்டி அரசியல் அமைப்பும் இயங்கும் ஓர் அரசாங்கத்தைச் சேர்ந்தவரேவெளிநாட்டுக்கு வந்து, சமஷ்டி முறையைக் கண்டிப்பாரா? வாசகர்களில் சிலருக்காவது பகுத்தறிவுண்டு என்பதை உணர்ந்திருந்தால் அந்தநிருபர் இவ்விதம் முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பாரா? பாவம்!

0 0 0

இலங்கை சிறியதாயினும் மேற்கு ஜெர்மனிக்கு அது ஏதாவது உதவ முடியுமா? என்று கேட்டேன். முதலில் ஜெர்மன் அமைச்சருக்கு என் கேள்வி புரியவில்லை. தமது நாடு இலங்கைக்கு என்னென்ன விதங்களில் உதவி செய்கிறதென்பதை விளக்க முற்பட்டார். பக்கத்திலிருந்த அதிகாரி என் கேள்வியை தெளிவாக்கியதும், அமைச்சர் சிரித்துவிட்டு, தமது பெட்டியில் மூன்று பாக்கெட் தேயிலைத் தூள் வைத்திருப்பதாகப் பதிலளித்தார். இலங்கைத் தேயிலையை சரிவரக் கலந்து அளித்தால் மிகவும் நல்லதென்ருர் பக்கத்திலிருந்த அதிகாரி.

இலங்கை சிறியதாயினும் நமது நல்லெண்ணமும் அபிமானமும் தங்கள் நாட்டுக்கு வேண்டுமென்று ஜெர்மன் அமைச்சர் கூறுவாரென்று எதிர்பார்த்தேன்.

மூன்ருவது உலக யுத்தம் ஏற்படுமா? என்று கேட்டதற்கு இன்றைய சூழ்நிலையில் அவ்விதம் ஏற்படாதென்றே மறைமுகமாகச் சொன்னுர் அவரது இக் கருத்து பலித்தால் ஜெர்மனியர் உள்ளிட்டு உலக மக்கள் அனைவருக்கும் அது பெரும் ஆறுதலாக இருக்கும்.

ஜெர்மனியை இரண்டாகப் பிரித்து, இடையே சுவர் எழுப்பியுள்ளனரல்லவா? ஒரு பக்கம் தாத்தாவும் பாட்டியும் 'பைனுகுலர்' பூதக் கண்ணுடியை வைத்துக் கொண்டு, சுவருக்கு மறுபுறம் தங்கள் மகள் தனது குழந்தையை உயரத் தூக்கிக் காட்டுவதைப் பார்த்துத் திருப்தி அடைய வேண்டியுள்ளதாம்! பல குடும்பங்களும் பிரிந்து சங்கடப்படும் கண்ருவியைக் கேட்க மிகப் பரிதாபமாக உள்ளது.

0 0 0

கழியக் கண்டிலேன் கண்ணெதிரே கண்டேன், ஒழியப் போந்திலே ஒனக்கலேயோபூடந்தேன், வழியிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் மீதும் கூட அன்பு காட்ட வேண்டுமென்று கூறுவது சைவம். அதனுலேயே அதன் மாண்பு பெரிதென்பர். ஆனுல் இன்றைய சைவ சமூகத்திலே எல்லா உயிர்களிடத்திலும் இல்லாவிட்டாலும் சைவ சமூகத்தைச் சேர்ந்த எல்லா மக்களிடமாகிலும் அன்பு காட்டப்படுகிறதா என்பதைச்சற்றே ஆராய்ந்து பார்ப்பின், இன்று சைவ சமூகத்தின் தாழ்வுக்குரிய காரணத்தை சுலபமாக அறியலாம்.

''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'' என்று வாயளவில் கோஷிப்பதுடன் நின்றுவிடாமல், அதுசெயற்படுகின்றதா? என்பதை சைவ அறிஞர்கள் ஆராய்ந்து பார்ந்து, குறைகளை நிறை செய்ய முற்பட்டால் தான், சைவ சமூகம் மீண்டும் புத்துயிர் பெற்று தலைதூக்க முடியும். காலச் சக்கரம் அதிவேகமாகச் சுழன்று வருகிறது. அந்தச் சுழற்சியிலே, உலகமனைத்தும் ஒரே குடும்பமாக ஒன்றுபட பல பல ஆச்சரியமான மாறுதல்கள் ஏற்பட்டு வருவதைப் பார்க்கின்றோம். சைவத்தின் மாண்பினை அறியவும், அதைப்பேணிப் பயன் பெறவும் வேறு நாட்டவரிமுண்டு.

சைவ சமூகத்திலே சாதி இறுமாப்பும், வேற்றுமைகளும் புகுந்து உலகமே சிரிக்குமளவுக்கு நிலைமை எவ்வளவு தூரம் மோசமாகியுள்ள தென்பதை விளக்கத்தேவையில்லை. ''அந்தணன் அந்தணனுக்கு அடிமையாவதா?'' என்று முதலில் சாதி இறுமாப்புடன் பேசியவரே பின்னர் தடுத்தாட் கொள்ளப்பட்டதும் ''திருநீலகண்டத்துக் குயவனுர்க்கடியேன்'' என்று மனம் திருந்தி சாதிச் செருக்கை விட்டாரென்பது குறிப்பிடத்தக்கது. இன்று சைவ சமூகத்திலுள்ள சிக்கல்களையும் அநீதிகளையும் நீக்குவதற்குப் பெரிய புராணம் போன்ற தெய்வீக நூல்களும் நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறுகளும் பயன்பட வேண்டும். இவ்விஷயத்திலே யாழ்ப்பாண சைவ பரிபாலனசபை இனி அதிக துணிச்சலுடன் தொண்டாற்றுவதன் மூலம், சைவ சமூகத்துக்கு மட்டுமன்றி, தனக்கே பெரு நன்மை செய்து கொண்டதாகும். அப்போதுதான் மேன்மைகொள் சைவ நீதியும் உலகமெல்லாம் விளங்க வழி பிறக்க முடியும்.

## ''இது எங்கள் ஆட்சி''

'நாட்டின் பொறுப்புகள், நடைமுறைச்செயல்களுக்கும், நிர்வாகத்திறமைக்கும் ஏற்றமுறையில் பகிர்ந்து அளிக்கப்படுவதில்தான் மாநில-மத்திய அரசுகளின் உறவு வளரும் மக்கள் வளம் பெருகும். மக்களும் அப்போது தான் ''இது எங்கள் ஆட்சி' என்று உணர்வு பெற்று அரசாங்கத்தின் பணியிலே நேரிடையாக ஈடுபடுவார்கள்' என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு கருணநிதி புதுடில்லியில் நடந்த இந்திய தேசிய அபிவிருத்திச் சபைக்கூட்டத்தில் பேசுகையில் சரியாக எடுத்துக் காட்டியிருக்கிறுர்.

பொருளாதாரத் துறையின் பல்வேறு பிரிவுகளில் மத்திய அரசு எடுக்கும் முயற்சிகளைச் செயல்படுத்தும் பொறுப்பும் முடிவில் மாநிலங்களின் மீதே விழுகின்றன என்றும் அத்தகைய பொறுப்புகளை மட்டும் மாநிலங்களின் மீது சுமத்தி, அவற்றை நிறைவேற்றும் வலிமையான அதிகாரத்தை மத்திய அரசு மாத்திரம் வைத்துக்கொள்வது சரியாகாது என்றும் திரு. கருணநிதி சுட்டிக்காட்டி தேசிய அபிவிருத்திச்சபையையே மாற்றியமைக்க வேண்டுமென்று யோசனை கூறி அதற்கான காரணங்களையும் ஆதாரத்துடன் சுட்டிக்காட்டியிருக்கிறுர்.

அதிகாரங்களை மத்திய அரசு தன்னிடம் குவித்து வைத்துக் கொண்டு பொறுப்புக்களை மாநில அரசுகளிடம் விட்டுவிடுவதால் மத்திய அரசுக்கும் கஷ்டம் மாநில அரசுகளுக்கும் தொல்லை. இதனுல்தான் அதிகாரங்களை ஒரே இடத்தில் குவித்து வைத்திருக்காமல் பகிர்ந்துகொடுக்கும்படி கோரி திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் ஆகஸ்ட் மாதத்தில் போரரட்டம் நடத்தத் திட்டமிட்டிருக்கிறுர். திரு. ம. பொ. சி. யின் போராட்டமும் திரு. கருணநிதி தேசிய அபிவிருத்திச்சபைக் கூட்டத்தில் தமிழிலில் நடத்தியிருக்கும் வாதாட்டமும் ஒன்றுதான். போராடியும் வாதாடியும் மாநில அரசுகள் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டால் அதனுல் மாநிலங்களுக்குமட்டுமல்ல மத்திய அரசாங்கத்தின் சுமை குறைந்து நாடு முழுவதற்குமே முன்னேற்றமும் நன்மையும் கிடைக்கும்.

ஆங்கில நாட்டு மாணவன் பாடசாலையில் கற்பனுகில் அவன் சுமாரான அறிவைப் பெற்றிருப்பானென அவரது விமர்சகர் பலர் கருதுவதுமுண்டு. எனினும் இப்பதினன்குவருடங்களில் ஷேக்ஸ்பியரிடம் மாமேதைக்குரிய ஆரம்ப அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை என்றே பலர் கருதுகிறுர்கள்.

பதினெட்டாவது வயதில் தன்னிலும் எட்டு வயது மூத்த அன்னி ஹதவே என்னும் பெண்ணை ஷேக்ஸ்பியர் மணம்புரிந்தார். இவ்வேளையிலேதான் ஷேக்ஸ்பியர் புரளிகள்செய்ய ஆரம்பித்தாரெனத் தெரிகிறது. தனது கணவனை நல்வழிப்படுத்த இயலாது மனைவியும் திண்டாடினுர். அயலிலுள்ள சேர் தோமஸ் லூசி என்பவருடைய தோட்டத்தைச் சூறையாடுவதும் ஒரு வழக்கமாகிவிட்டது. செல்வாக்கு நிரம்பிய அக்கனவான் இவருக்குச் சவுக்கடி பெற்றுக் கொடுப்பதோடு, சிறையிலும் தள்ளியதுண்டு. இதனுல் நிரம்பிய பகை கொண்ட ஷேக்ஸ்பியர், தோமஸ் லூசியை நிந்தித்து ஒரு காரசாரமான கவிதையும் பாடிவிட்டார். கனவான் தொடர்ந்து இவரை நீதிமன்ற நெருக்கடிக்குள் சிக்கப்பண்ண நடவடிக்கை எடுக்க முயற்சித்ததை அறிந்த ஷேக்ஸ்பியர், வழியேதுமில்லாது 1585ல் லண்டனுக்கு ஓடிவிட்டார். இதே சமயம் இல்லறத்திலும் வெறுப்பு ஏற்பட்டது.

இரண்டு வருடங்கள் நடைபெற்றிருக்கலாமென நம்பப்படுகிறது. இதன் பின்னரே தனது அசல் நாடகங்களை தொகுத்தார். நடிப்புத்துறையிலும் ஈடுபட்டதால் நாடகங்களைப் பாத்திரலயத்துடன் ரசிப்புத்தவழ எழுதும் வல்லமையைப் பெற்று விரைவில் முன்னணி நாடகவிற்பன்னராகியும் விட்டார்.

லண்டனுக்கு வந்து 24 ஆண்டுகட்குள் 37 அதி உத்கங்கள் இக் காலகட்டத்தில எழுதப்பட்டன. இந் நாடகங்களில் பலவற்றில் கருத்துச் செறிவுத் தட்டுப்பாடு காணப்பட்ட போதிலும் அவற்றின் இலக்கிய நடை கலகலப்பில் சளைத்தவையல்ல. நாடகவித்தகத் தன்மையின் பயிற்சி பொருந்திய காலம் அது. இரண்டாவது கட்டம் 1595 - 1601 வரையாகும். இக் காலகட்டத்திலேதான் பிரசித்தி

ஷேக்ஸ்பியரும் பிறந்தகம் மீண்டும் செல்வாக்குடன் காலங்கழித்தார். தனது 52 வது ஆண்டில் இவ்வுலக வாழ்க்கையை நீத்து அப்பட்டினத்தின் பிரசித்தி பெற்ற கல்லறைக்குள்முடங்கிக்கொண்டார்.

''இனிமைதவழும்' அவன்-பட்டின' அன்னமே! உன் தோற்றத்தின் எழில்தான் என்னே...'' எனபென்ஜோன்சனும் பாடிமுடித்தார்.

பழையபடி ...யும் அரசாங்க மொழிகளாக்குவீர்களா?'' என்று அதே நிருபரை திருப்பிக் கேட்டேன். அவர் பதிலளிக்கவில்லை.

ஆனுல் மறுநாள் அவரது பத்திரிகையை பார்த்தேன். ''சமஷ்டி முறையை ஜெர்மன் அமைச்சர் எதிர்த்தார்'' என்று கொட்டை எழுத்தில் தலைப்பும்போட்டு எழுதியிருந்தார். இரண்

...கேட்க மிகப் பரிதாபமாக உள்ளது.

0 0 0

கழியக் கண்டிலேன் கண்ணெதிரே கண்டேன், ஒழியப் போந்திலே ஒனக்கலேயோபூடந்தேன், வழியிற் கண்டிலேன் வாய்மூதடிகள் தம், சுழியிற்பட்டுச் பட்டுச் சுழல்கின்ற தென்கொலோ.

— அப்பர் அடிகள்

# தேசிய இனங்களின் நண்பன் லெனின்

### சோவியத் நாட்டில் முடியாட்சியை ஒழித்து குடியாட்சி மலரவைத்த லெனின் பிறந்ததினம் இன்று.

லெனின் என்ற பெயர் வரலாற்றில் இடம்பெற்ற பெரும் பெயராகும். ''வல்லான் பொருள் சேர்க்கும் தனிஉடைமை நீங்கிவர வேண்டும் திருநாட்டில் பொதுவுடைமை'' என்று கூறினுர். தாம் பிறந்த ஜாரின் சாம் ராஜ்யத்தை ஆட்டி அசைத்த ''யுகப் புரட்சியின்'' பிதாலெனின். 1917-ம் ஆண்டு உலகின் முதலாவதுபாட்டாளிகளின் புது அரசு கண்ட மேதை அவர். லெனின் பிறந்து இன்று (ஏப்ரல் 22) 99 ஆண்டுகள் ஓடிவிட்டன. இந்திய விடுதலை இயக்கத்தின் வழிகாட்டியாகத் திகழ்ந்த நேரு அவர்கள் லெனின் மீது அளவுகடந்த அன்பு வைத்திருந்தார். நேருவின் வாழ்க்கைக் குறிப்பின் முடிவில் ''உலகின் அடிமைப்பட்ட கடைசி மனிதனின் விடுதலைக்காக எனது வாழ்வின் கடைசி மூச்சுவரை உழைத்தேன்'' என்று கூறிக்கொண்டு இறந்தால் அதுவே எனது வாழ்வு பயனுள்ளதாக அமைந்தது என்று என்னைச் சிந்திக்கத் தூண்டும்'' என்று கூறியுள்ளார். மேற்படி குறிப்பு லெனின் அவர்களுடையது என்பதையும் நேரு அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார்.

அமைந்தவுடன் தேசிய இனங்களின் விடுதலைக்காக வழிவகுத்த பெரும் மேதை.

இவர் வழிநடத்திய ஒக்டோபர் புரட்சியின்போதும் அதற்கு முன்பும் பின்பும் தமது நாட்டு மக்கள் மீது அவர் காட்டிவந்த அன்பும் பரிவும் அதிஅற்புதமானது. தனிமனிதர்கள் மீது பற்றும் பாசமும் கொண்டு குடும்பநிலைவிசாரித்து அவரவருக்குவேண்டிய உதவிகளை உடனுக்குடன் உத்தரவிட்டு செய்துவைக்க அவர் தவறவில்லை. ஆகவே தான் இவர் கட்டிவளர்த்த கம்யூனிஸ்ட் இயக்கத்தில் மனிதத்துவம் தொனிக்கின்றது.

இவர் உலகத்தை ஒன்றென உணர்ந்த உத்தமர். சர்வதேச மனப்பான்மையைவளர்த்து உலக சகாதரத்துவத்தை அரசியலில் ஏறபடுத்தினுர்.

லெனின் 100வது ஆண்டு நிறைவைக் கொண்டாட

— வ. பொன்னம்பலம் எம். ஏ. —

லெனின் தனது நாடாம் உருசிய நாட்டில் நிலவிய கொடுங்கோலாட்சியை வீழ்த்தியபின் ''குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு மேன்மையுறக் குடிமை நீதி'' கண்ட சோவியத் குடியரசுஅமைத்தார்.

அவர் அமைத்த புது அரசில் 89 தேசிய இனங்கள் இணைந்து இன்பமாக வாழ்ந்துவருகின்றன. மனிதனை மனிதன், இனத்தை இனம், மொழியை மொழி அடக்கியாளும் கூட்டாட்சி ஒழிக்கப்பட்டு இன்று சோவியத்நாட்டின் மக்கள் யாரும் சரிநிகர்சமானமாகவாழ்ந்து வருகின்றனர். லெனின் தேசிய இனங்களின் பெரும் நண்பன். சோஷலிசஅரசு உலகநாடுகள்சபை தீர்மானித்திருப்பது குறிபபிடத தக்கது. இலங்கை அரசின் பிரதிநிதியே ஐ.நா.சபையில் இதைப் பிரேரித்திருக்கிறுர். இம்முடிவின்படி இலங்கை உட்பட உலகின் பல நாடுகள் லெனின் 100 ஆண்டு தினத்தை அரசாங்க மட்டத்தில் கொண்டாட முன் வந்திருக்கின்றன,

லெனின் கருத்துக்கள் அடிமைப்பட்ட நாடுகளின் விடுதலைக்கு விடிவெள்ளி போன்றது. மனிதகுலம் உலகுள்ளவரை லெனின் நாமம்உலகில் நிலைபெற்று நிற்கும்.


## திருமண அழைப்பு

மணமகன்: செல்வன் சுப்பிரமணியம் கணேஸ்வரன்
(வருமானவரி இலாகா,கொழும்பு)

மணமகள்: செல்வி மனேஹரி

இடம்: ''சத்தியஸ்தான்'', மல்லாகம்.

காலம்: சித்திரை 11ம் நாள் (23-4-69)
புதன்கிழமை மாலை 7-40 முதல் 9-40வரை

வரவேற்பு உபசாரம்: மணமகன் இல்லத்தில்
24.4.69-ந் திகதி மாலை.
மணமகள் இல்லத்தில்
25.4.69-ந் திகதி மாலை.

உறவினர்களும் நண்பர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்:

செனட்டர் சு.நடராஜாவும்
பாரியாரும்
(மணமகளின் பெற்றோர்)
''சத்தியஸ்தான்''
மல்லாகம்.

திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம்
(மணமகனின் தாயார்)
ஸ்டேசன்வீதி,
தெல்லிப்பளை.

1531


### கவிஞர் பாரதிதாசன் தினம் நேற்று

## பாரதித்தாசன் சிங்கக் கவிஞன்

பாரதி தாசனடா --- அவனொரு
பண்புக் கவிஞனடா
0 பாரதி தாசனடா --- அவனொரு
பக்திக் கவிஞனடா! (பாரதி)

வாரிளஞ் சோதியடா --- வையத்து
வள்ளற் கவிஞனடா
சீரிளஞ் செம்மலடா --- சிறந்த
சிந்தனைச் சிற்பியடா! (பாரதி)

புரட்சிக் கவிஞனடா --- புவிக்கொரு
புதுமைக் கவிஞனடா
வரட்சிக் கவிஞர்கட்கே --- வானுற
வளர்வரைத் தீபமடா! (பாரதி)

பாரத நாடுதந்த --- பரந்த
பார்புகழ் மேதையடா
வீரத் தியாகனடா --- உண்மையில்
வித்தகச் சித்தனடா! (பாரதி)

பேரிளம் போதனடா --- ஓர்வித
0 பெற்றிக் கவிஞனடா
சீரிளங் கொண்டலடா --- திறன்மிகும்
சிங்கக் கவிஞனடா! (பாரதி)

முருகசூரியன்

0 பாரதி: சரஸ்வதி. 0 பெற்றி: தன்மை.

## ஆலயத்திலே தடைகள்

சென்ற வருடம் ஜூலை மாதம் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் நடந்த ஹரிஜனர் ஆலய சத்தியாக்கிரகத்தைதப்பற்றியும் அதைத் தொடர்ந்து அரசாங்க நடவடிக்கைகளைப் பற்றியும் பத்திரிகைகளில் இதுவரை வெளிவராத சம்பவங்களை சேர்த்து 'ஆலயத்திலே தடைகள்' என்ற புத்தகமாக எழுதியுள்ளார் லேக்கவுஸ் நிருபர் ஜி. டி. பொன்கலன். ஆங்கிலத்திலே எழுதப்பட்ட இப்புத்தகம் 'டைம்ஸ்' ஸ்தாபனத்தாரால் அச்சிடப்பட்டு 'கேங்ஸ் கொம்பனி'யால் விநியோகிக்கப்படுகிறது.

## சைக்கிள் வீரர்கள்

திருக்கோணமலை, திங்கள் தம்பலகாமம் கோயிற் குடியிருப்பு வாலிபர்களால் புதுவருடப்பிறப்புத்தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட சைக்கிள் ஓட்டப் போட்டி முடிவுகள் வருமாறு:-

20 வயதுக்குட்பட்டவர்கள்:- செல்வன்கள் என். செல்வராசா, என். தனபாலசிங்கம், தெ. சித்திரவேல்.

15 வயதுக்குட்பட்டவர்கள்:-

செல்வன்கள் கு.கோபாலபிள்ளை. க. கணேசபிள்ளை, த. குணரத்தினம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம்ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org